தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

“போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !”

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளி நாடு: மூன்றணா. | அலுவலகம்: ‘தென்றல்’ சென்னை-6.

மலர் 1 | சென்னை 19—2—1955 சனிக்கிழமை | இதழ் 34

முல்லை நகை பூக்கும் முற்றாத நிலவு !

★

இளந்தளிர் !

சிறு கை விரித்து எழில்பரப்பும் செல்வம் ! சிந்தை அணுவெலாம் சிலிர்த்திடச் செய்யும் சீதளப் பிறைநிலவு ! செக்கர் வானத்துச் சிவப்பை சிங்கார இதழ்களில் தேக்கி செங்கனி விரித்ததுபோல் சிரித்துக்காட்டும் இன்பப் புதையல்! ஈடில்லா எழிலோவியம் ! அழகின் தேக்கம் ! காதல் இன்பத்தின் கனி ரசம் ! இணைந்த இரண்டுள்ளங் கள் வடித்தெடுத்த கட்டாணி முத்து! தென்றலில்மலர்ந்து மணம் உறங்கும் தூயமல்லிகை ! பனி தூங்கும் பட்டு ரோஜா ! பண் பமைந்த கட்டிப் பவளம் ! வாழ் வின் கண்மணி ! பெண் குலத்தின் பெரும் பரிசு ! இல்லறத்தின் தீபச் சுடர் ! களங்கமில்லா மாணிக்கப் பரல் ! வன்னக் குயில்! மலர் குலத் தின் தேனமுதம் ! சின்ன ஒளி விளக்கு ! சிங்கார மணிப் புறா ! மழலைக் குழவி !

— அந்தத் தமிழழகு —

குறுகுறு நடந்து சிறு கை நீட் டும் ! சிந்தையெல்லாம் குளிரும் ! அயர்வெங்கோ ஓடிவிடும் ! இன்பம் இதயத்தை தன் மென்கரங்களால் தடவும் ! முல்லை நகை பூக்கும் அந்த முற்றாத பிறை நிலா ! அது கோடி பெறும் ! உதைக்கும் அந்த உயிர் சித்திரங்கள், உதைத்த காலுக்கு முத்தமும் பெறும் ! உமிழும் அந்த ஒளி முத்து ! உயி ரெல்லாம் — உடம்பெல்லாம் தேன் கலக்கும் ! குழலும் யாழும் அந்த குழவியின் முன்னே பாழ் ! பாழ் ! அதோ அந்தக் காதல் உலகின் கனிநகை ! இளந்தளிர் ! எழுஞ் சுடர் ! குளிர்தென்றல் ! நினைத் தாலே கவிதை கூத்தாடுகிறது !

எழுஞ்சுடர் !

★

Best copy available

எண்ணம்

கண்ணதாசன்

சென்னை நகரிலே ஜெனரல் ஆஸ்பத்திரி என்பதாக ஒன்று இருக்கிறது. ஏழை எளியவர்கள் யாவருக்கும் வைத்திய வசதி கிடைக்கும் பொருட்டு அரசியலாரால் ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் இந்த ஆஸ்பத்திரியை யார் பார்வையிட்டாலும், அவர்கள் மனிதத்தன்மை உடையவர்களாக இருந்தால் இரத்தக்கண்ணீர் வடிக்காமலிருக்க முடியாது. மிகப் பெரிய கட்டிடம், ஏராளமான வார்டுகள்; வதவதவென்று நிரம்பிக் கிடக்கும் நர்சுகள், டாக்டர்கள்; எல்லாம் இருந்தும் போகிற நோயாளி, உடல் வேதனையோடு மனவேதனையையும் சுமந்துகொண்டு திரும்புகிற கண்ணறுவிக் காட்சி இங்கே காணக் கிடைக்கிறது !

மனித குணத்தின்-அன்பு இதயத்தின்-அடைவிடமாக இருக்கவேண்டிய ஜெனரல் ஆஸ்பத்திரி மிருக குணத்தின் பிறப்பிடமாய் இருக்கிறது. அலறுகிற நோயாளியையும், அதை சகஜமாகக் கருதிக்கொண்டு அலட்சியமாக நடக்கிற வைத்தியர், நர்சுகள் முதலியோரையும் இங்கே எந்த நேரத்திலும் காணலாம். யாராவது ஒரு நோயாளியிடம் போய், “ ஏனப்பா, எப்படி கவனிக்கிறார்கள் உன்னை ?” என்று கேட்டுப் பாருங்கள். “ காலையிலேருந்து கத்துறேன் சாமி! ஒருவரும் திரும்பிப் பார்க்கமாட்டேங்கிறாங்க ”என்று தளர்ந்த குரலில் கூறுவான். நமக்குக் கண்ணீர் வரும்; ஆனால், அங்கே இருக்கும் ஊழியர்கள் அதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. என்னவோ, ஒவ்வொருவரும் மைசூர் மகாராஜாவின் பேரப்பிள்ளைகள் மாதிரி ஆகாயத்தைப் பார்த்தபடிதான் நடக்கிறார்கள். நோயாளியின் வேதனைக் குரல் அவர்களுக்கு சங்கீதமாகக் கேட்கும் போலிருக்கிறது. காலையிலே எழுந்ததும் சலவை செய்த வெள்ளை உடை அணிவதில் மட்டும் எதுவும் குறைச்சலில்லை. நர்சுகளெல்லாம் திருமணத்திற்கு வந்திருக்கிற விருந்தாளிகள் மாதிரி தான் காணப்படுகிறார்கள். ஆணும் பெண்ணுமாக அரட்டையடித்துக் கொண்டு உல்லாச வாழ்வு நடத்துகிறார்கள். அதன்றியும், பணம் படைத்த நோயாளிகளுக்கு அங்கே எப்போதும் பாதை திறந்துவைக்கப் பட்டிருக்கிறது. இந்த கல்யாண குணங்களுக்கு அரசாங்கம் ஏராளமான பணத்தைச் செலவிட்டு வருகிறது.

வைத்தியத்தொழில் ஒன்றுதான், இளகிய இதயங்கள் நடத்தவேண்டிய தொழில். [illegible] உள்ளம் படைத்தவர்கள், வைத்தியர்களாகி, தொழில் நடத்துவதை முடிந்தால் சட்டம் போட்டுக்கூடத் தடுக்கலாம். அவர்கள் சமுதாயத்தின் பயங்கரமான எதிரிகள் ! கொலையைத் தொழிலாகக் கொண்டவர்களைவிட மோசமானவர்கள் ! வைத்தியத்திற்கு வந்த நோயாளியை ஒரு வைத்தியர், மனமறிந்து கவனிக்காமல் விட்டு, அந்த நோயாளி இறந்து போனால், அந்த வைத்தியரை, நடுத்தெருவில் நிறுத்தி சாட்டையடி கொடுக்கிற அளவுக்கு ஒரு சட்டம் செய்தால்கூட நாடு அதை முழு மனதுடன் வரவேற்கும். காரணம், நாட்டிலே யாரும் பிடித்து வைத்த பிள்ளையார்களல்ல, ஆடாமல் அசையாமல் அன்றிருந்த மேனி அழியாமல், கெடாமல், அப்படியே இருப்பதற்கு! நோய், யாரையும் தீண்டிவிடுகிறது. யாரும் வைத்தியரிடம் போகத்தான் வேண்டி வருகிறது. போகிற இடத்திலே இரண்டு ஆறுதல் வார்த்தை கிடைத்தால்கூட நோய் பாதி தீர்ந்துவிடுகிறது. தாய்களுக்கெல்லாம் தாயாக, தந்தையர்க்கெல்லாம் தந்தையாக, ஒழுங்கான கடவுளுக்குச் சொல்லப்படுகிற குணங்களோடு இயங்க வேண்டியவர்கள், வைத்தியர்கள். அவர்கள் கசாப்புக் கடைக்காரர்களாக மாறுவதை சமுதாயம் தாங்கமுடியாது. உண்மையைச் சொன்னால், ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருக்கும் பெரும்பாலான டாக்டர்கள்- சிலரைத் தவிர- கசாப்புக்கடைக்காரர்களாகவே காட்சியளிக்கிறார்கள். வலி தாளாது அலறுகிற நோயாளியை அதட்டுகிறார்களே தவிர, ஆறுதல் வார்த்தை சொல்வது கிடையாது ! அவர்களில், சிலர் சட்டபூர்வமாக இயங்குகிறார்கள். அதாவது, எட்டு மணிக்குத்தான்ஒரு நோயாளியைப் பார்ப்பதாக இருக்கிறார்கள் என்றால், அதற்கிடையில் அவன் செத்தாலும் திரும்பிப் பார்ப்பதில்லை. இப்படி, ‘மணியளந்தஉத்தியோகம்’ மற்ற தொழிலில் இருக்கலாம். வைத்தியத் தொழிலில் கூடாது; குற்றவாளிக்கு வாதாடப் போகிற வக்கீல் . கோர்ட் நேரத்திற்குப் போனால் போதும்; ஆனால், நோயாளியைக் கவனிக்கப் போகிற வைத்தியர், அவனது நோயின் நிலையறிந்து அடிக்கடி கவனிக்க வேண்டும். “இல்லை, என் ‘ட்யூட்டி’ பத்து மணிதான்” என்று சம்மணம் போட்டு உட்கார்ந்துவிட்டால், நோயாளி செத்து-விரைத்துப் போனபின்தான் சில சமயம் அவரது ‘ட்யூட்டி’ வரும்!

இருபத்திநாலு மணி நேரமும் வைத்தியர்கள் இயந்திரம் போலத்தான் இயங்கவேண்டும். அப்படி இயங்கக்கூடிய மனப்பான்மையும் சக்தியும் உடையவர்கள்தான் வைத்தியத் தொழிலுக்குப் படிக்க வேண்டும். உடல் நோயாளியைக் காட்டிலும் மோசமான மன நோயாளிகள் வைத்தியர்களாக வரக்கூடாது; வேண்டுமானால் இருந்த இடத்திலே இருந்து பார்க்கக்கூடிய தொழிலான ‘பலசரக்குக் கடை’ வைக்கலாம்.

சமீபத்தில் சென்னை சர்க்கார் ஆஸ்பத்திரி ஒன்றில் கால்முறிந்த ஒரு நோயாளியைக் கொண்டு போய்ப் போட்டார்களாம். அவனுக்கு வைத்தியம் பார்த்த வைத்தியர், கால்கட்டை எப்பொழுது அவிழ்த்துக் கட்டுவது என்று, ‘ட்யூட்டி’ மாற்றி வந்த வைத்தியரிடம் தெரிவிக்காமல் போய்விட்டாராம். இதனால், கால்கட்டு அவிழ்க்கப்படாமல், சீழ்பிடித்து, காலையே எடுக்கவேண்டிய நிலை ‘ஏற்பட்டதாம். இந்தச் செய்தியை ஜெனரல் ஆஸ்பத்திரியிலேயே கேட்டேன். இது உண்மைதான் என்றால் ஒரு வைத்தியரின் கவனக்குறைவு, ஒரு மனிதனின் வாழ்வையே பாழ்படுத்திவிட முடியும் என்பதைத் தான் இச்செய்தி கூறுகிறது.

உண்மையில், ஜெனரல் ஆஸ்பத்திரி, பயங்கரக் கிடங்காகவே காட்சியளிக்கிறது. “ இன்ன வார்டு எங்கே இருக்கிறது ?” என்று யாராவது வந்து விசாரித்தால் ஒவ்வொருவரும், “ யாருக்கு வந்த விருந்தோ ” என்று போகிறார்கள். இல்லையென்றால், “ தெரியலை சார் ! பாருங்க !” என்று அலட்சியமாகக் கூறிவிட்டுப் போகிறார்கள். போகிறவனுக்கு, “எட்டி உதைக்கலாமா ?” என்றுகூடத் தோன்றும்; அவ்வளவு ஆத்திரம் வரும். ஜெனரல் ஆஸ்பத்திரியை இவ்வளவு பெரிதாகக் கட்டிவைத்தது, உல்லாச ஜோடிகளின் ‘தொங்கு தோட்டமாக’ விளங்குவதற்காக அல்ல; மௌன மொழியில் ‘டூயட்’ பாடுவதற்காக அல்ல என்பதையும் கூறத்தான் வேண்டியிருக்கிறது. இரக்கம் மிகுந்த ஒரு சமுதாயத்தின் உயிர்போன்றவர்கள் அங்கே தொழில் புரியவேண்டும் என்கிற நல்லெண்ணத்தோடுதான் ஜெனரல் ஆஸ்பத்திரி கட்டப்பட்டது என்பதோடு, பணங் கொடுத்து வைத்தியம் பார்க்க முடியாதவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதுதான் அதன் மூல நோக்கம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இந்த ஆஸ்பத்திரிகளை நிர்வகிக்கும் பகுதி எந்த மந்திரியின் கையில் இருக்கிறது என்றே யாருக்கும் தெரியவில்லை. காரணம், அந்த மந்திரி இந்தத் துறையில் அவ்வளவு சுறுசுறுப்பாகப் பணி புரிகிறார் ! இந்த ஆஸ்பத்திரிகளை அவர் எப்போதாவது ‘ மனந்துணிந்து ’ பார்வையிட்டாரா என்பதும் தெரியவில்லை. (அப்படிப் பார்வையிட்டாலும் அன்றைக்கு மட்டும் ஆஸ்பத்திரிகள் சுறுசுறுப்பாக இயங்கும்) இப்படி, ‘தூங்கு மூஞ்சி’ மந்திரியும், இரக்கமற்ற வைத்தியர்களும் நமது வைத்திய இலாகாவுக்கு வாய்த்ததுதான், நம்முடைய நோய்களிலெல்லாம் பெரிய நோயாகும் !

இத்தகைய மோசமான நிலையில் ஆஸ்பத்திரிகளை வைத்துக்கொண்டு, வரிப்பணத்தை வாரி இறைத்து கன்னெஞ்சர்களுக்கு ஊதியம் கொடுப்பதைக் காட்டிலும், அவர்களை எல்லாம் மூட்டை தூக்க அனுப்பிவிட்டு, ஆஸ்பத்திரிகளை சவக்கிடங்குகளாக மாற்றிவிடுவது நல்லது ! அந்த இலாகாவை நிர்வகிக்கிற மந்திரியும் எங்கேயாவது, ‘பங்கி மட’த்திற்குப் போய்விடுவது நல்லது !

கொள்கையல்ல . . . சலுகைதான்!

இந்த கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்களே அவர்களைப்பற்றி பலருக்கு பல விதமான அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றதல்லவா! ஆனால் நம்மைப் பொருத்த வரை, தென்னாட்டிற்கேற்ப சில கொள்கைகளை அவர்கள் மாற்றிக் கொள்ளாவிடில் கம்யூனிஸ்டுகட்சி திராவிடத்திற்கு தேவையில்லாத—பயன் பட முடியாத ஒரு கட்சி என்பது எண்ணம். இதை பொதுமக்களும் உணர்ந்து வருகின்றனர்.

ஆனால் வர வர அந்த கட்சியின் நிலை பரிதாபகரமாக மாறிக் கொண்டு வருகிறது. தொழிலாளர் பலர் அந்தக் கட்சியின்மீது வைத்திருந்த ஓரளவு நம்பிக்கையும் குறைந்து கொண்டு வருகிறது. மற்றக் கட்சிகளை கொள்கையில்லாதவர்கள் - தத்துவமில்லாதவர்கள் என்று கூறிவந்த இந்திய கம்யூனிஸ்டுகளின் நடைமுறை அரசியல் நிகழ்ச்சிகளை கவனித்து வந்தால் தென்னாட்டைப் பொருத்தவரை கம்யூனிஸ்டு கட்சியின் ‘விலாசம்’ தேடிப் பார்க்க வேண்டிய நிலை வந்துவிடுமோ என்று எண்ண இடமிருக்கிறது.

திரு. கொச்சியில் உள்ள கம்யூனிஸ்டு கட்சியின் போக்கு அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது ! பி. சோ. கட்சி திரு. கொச்சி கம்யூனிஸ்டு கட்சியோடு சேர்ந்து ஐக்கிய இடதுசாரியில் நின்று காங்கிரசை எதிர்த்து வெற்றி கண்டபின் காங்கிரசோடு கை கோர்த்து மந்திரி சபை அமைத்தது.

அப்பொழுதெல்லாம் பி. சோக்களின் திட்டம்-கொள்கை முதலியவற்றை சட்டசபையிலும், மேடைகளிலும் முழுமூச்சோடு எதிர்த்தது கம்யூனிஸ்டு கட்சி. பிரஜா சோஷலிஸ்டு சர்க்கார் ஒரு பிற்போக்கு சர்க்கார் என்று எடுத்துக்காட்டினர். பி. சோக்களும் கம்யூனிஸ்டுகளை முதல் எதிரிகள் என்று கருதினர்.

எந்தெந்த காரணங்களுக்காக பிரசாசோஷலிஸ்டு மந்திரி சபையை கம்யூனிஸ்டு கட்சி எதிர்த்ததோ அந்தக் காரணங்கள் ஒன்றுகூட இன்றளவும் போக்கப்படவில்லை. இருந்தும் கம்யூனிஸ்டு கட்சி திரு. கொச்சி சட்டசபையில், பி.சோ. கட்சிக்கு ஆதரவுதரும் நடவடிக்கைகளில் இறங்கியது. இந்த திடீர் மாற்றத்திற்கு காரணம் பி.சோ. கட்சி கம்யூனிஸ்டுகளுக்கு காட்டிய சலுகைதான்.

அதாவது புன்னபாராவயலார் கைதிகளை பி. சோ. சர்க்கார் விடுதலை செய்தது ! இந்த சலுகைக்கு கம்யூனிஸ்டு கட்சி பதில் சலுகை காட்டவேண்டுமல்லவா ? அதற்காகத்தான் இந்தத் திடீர் மாற்றம்.!

எனவே திரு. கொச்சிதரும் பாடம்! கம்யூனிஸ்டு கட்சி கொள்கைக்காக இருக்கும் ஒருகட்சியல்ல. சலுகை கிடைத்தால்போதும், எதையும் செய்யும்-கொள்கையையும் மாற்றிக் கொள்ளும்-மாஸ்கோவையும் மறந்து விடும். நெருக்கடி வந்து விட்டால் நம்பிக்கிடக்கும் தொழிலாளர்களையும் கைநழுவ விட்டு விடும் என்பதுதான் !

★

இலக்கியத்தில்

கூளப்ப நாயக்கன் காதல்

—: காரை முத்துப்புலவர் :—

இவ்வளவு அலங்காரம் செய்துகொண்டு போகிற நவரத்னமாலையோடு எத்தனை தோழியர்கள் போகிறார்கள்; அத்தனை தோழியரின் பெயரையும் அடுக்குகிறான் கவி. ![வங்காரமாலை, முத்துமாலை, குணமாலை, சிங்காரமாலை, மோகனமாலை, சம்போக வல்லி, சரசவல்லி, காமவல்லி, அம்போருகக்கண் அமுதவல்லி, நீலவல்லி, மோகரத்னம், மாதுரத்னம், முத்துவசந்த ரத்னம், நாகரத்னம், ஆக பதினான்கு தோழியர் அவளோடு செல்கிறார்கள். (ஆகா! அவர்களெல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்று எந்த 'ஆதீன'மும் தேட வேண்டாம்! இது வெறும் கதை.)

அந்தப் பாங்கியருடன் அவள் பூவெடுக்கிறாள். 'பெண்மான்கள் சூழ்ந்துவர' பெண்யானை நடுவில் வர' என்று, அவள் வந்ததை வர்ணிக்கிறான் கவி. பெண்ணை யானை என்று வர்ணிப்பது, அவனது மனோபாவத்தைச் சித்திரிக்கிறது! அவள் பூப்பறிக்கும் போது ஒரு வண்டு எழுந்ததாம். எழுந்து, அவளுடையகையை கோகனகப்பூவென்று மொய்த்ததாம். வாளையொத்த செங் கருங்கண் மாதுள், மம்முதராசன் பாளையத்தைக் கொள்ளையிடும் பண்பாய் மலர் பறித்தாளாம்! அதாவது 'மன்மதன்' மீதே தாக்குதல் நடத்தி, கொள்ளையிடுகிற காட்சியாம் அது! இப்போது, கவி, இங்கே, அவளைத் தனியாகப் பிரிக்க ஆசைப்படுகிறான். தனியாகப் பிரித்தால் தானே, அங்கே காத்துக் கொண்டிருக்கிற காளையிடம் சேர்க்க முடியும்! அதற்காக வேண்டுமென்றே தோழியரைப் பிரித்து வைக்கிறான். ஏன் பிரிந்தார்கள், எப்படிப் பிரிந்தார்கள் என்கிற காரண காரியத்திலெல்லாம் அவன் இறங்கவில்லை. இந்த அனுவசிய விவகாரத்தில் கவிதா சக்தியை செலவிட்டு 'போர்' அடிக்க வேண்டாம் என்று கருதி, இரண்டே வரியில் அத்து விடுகிறான். "அங்கு நின்ற பெண்களெல்லாம் அங்கங்கேபோய் மறைய, இங்கு நின்ற பேதை, இனம் பிரிந்த மான் போல மெல்லத் தனி நடந்தாள்" என்று முக்கியப் பகுதிக்குத்தாவி ஓடுகிறான்! அந்தப் பெண்களெல்லாம் "அங்கங்கே போய் மறைய" என்பதற்கு, எங்கெங்கே என்று கேள்வி எழலாமல்லவா? அதைப்பற்றிக் கவி கவலைப்படவில்லை. சினிமாவில், எக்ஸ்ட்ராக்களை அங்கங்கே விட்டு விட்டு கதாநாயகியை டைரக்டர் தொடர்வதில்லையா, அதுபோல.

அவள் பூவெடுப்பதை மட்டும் கவி வெறுக்கிறான், பாசத்தோடு! "அடடா! சகல மலர்களும் இவள் உடலிலேயே இருக்க, இவள் ஏன், அனுவசியமாக வேறு பூவெடுத்து வேதனைப்படுகிறாள்!" என்கிறான். கண்ணிரண்டுங் காவி மலராம், கை இரண்டு, கால் இரண்டு, முகம் ஒன்று, ஆக்ஐந்தும் தாமரைகளாம், வாயிதழ் புன் முருக்கம் பூவாம், கோங்கு அரும்பு இரண்டாம் (இதை விளக்க முடியாது சென்ஸார்!) கோர்வையாக இருக்கின்ற முல்லை மொட்டுக்கள் பற்களாம்!; குமுதம் வாயாம், சண்பக மொட்டு மூக்காம். ஆக 'புஷ்பமாலா'வாக அவள் இருக்கிறாளாம். அவள்போய் ஒவ்வொரு செடி, கொடி, மரத்தையும் பார்த்து யாசிக்கிறாள்.

'சாதி நறுஞ்சண்பகமே!
தாதுளபூந்தாதகியே!
கோதிக்குழல் முடிக்கக் கோல
மலர் தாரீரோ!
மந்தாரையே! செருந்தி மா
மரமே! நீர் எனது
சந்தாபந்திரத் தரிக்க மலர்
தாரீரோ!
பாதிரியே, கரவிற் பனிநீர் பரு
மரமே!
மாதவியே! நீர் எனக்கு
வண்ணமலர் தாரீரோ!
விண்ணூர்ந்த புன்னை விருட்சமே!
குங்குமமே!
அண்ணாந்து நிற்கு மெனக்
கான மலர் தாரீரோ!
அம்பிட்ட கண்ணார் அகன்று விட்
டார்; உங்களை நான்
கும்பிட்டேன், கோகிலங்காள்!
கொய்து மலர் தாரீரோ!

என்று வேண்டுகிறாள். இந்த உரை கேட்டு, எழிற்குயிலும் கிளியும், கன்றி, மனம் நாணி, அந்தக் காவின் ஒரு புறத்தில் போய் ஒதுங்கி விடுகின்றன, "தோற்றோம்! தோற்றோம்!" என்று. உடனே அந்தத் தாமநறுங்குழலி, ஒரு பூமரத்தின் நிழலில் பூங்கொடி போல், தானொருத்தி மட்டும் தனியே நிற்கின்றாள்! அப்பாடா! இனிக்கவி, கம்பனைத் தூக்கிப் பந்தாடுவான்! அவள் தனியே நிற்கின்றாள் என்று நிறுத்தி விட்டான். இனி அவன் வருவான்! இங்கே, "எதிர் பாருங்கள்! எதிர் பாருங்கள்! லவ்சீன்! லவ்சீன்!" என்பதுபோல் கவி தயாராகிறான்! வேட்டியை வரிந்து கட்டிக் கொள்கிறான்.

ஏந்தும்[1] இளதனப்பெண் ஏகாந்த
மாயிருக்க
நாந்தக வீரன் பெரிய நாகம
கூளேந்த்ரதுரை,

வரப்போகிறான்! எப்படி?

அவன் இப்போது 'மன்மத'னாகி விடுகிறான். மன்மதன் ஆனதும், 'பரமசிவன்' அவனுக்குப் பகைவனாகி விடுகிறான்! (சியாங்குக்கு மாஸேதுங் போலென அறிக!) அந்தப் பகைவன், முன்பு தன்னை மூன்றும் கண்ணால் எரித்தான் என்ற 'கப்ஸா'வை நினைவு கொண்டு, அந்தப் பரமசிவனை வெல்ல, புது அம்பு தேடி வருகிறானும்! (சியாங்கேஷேக் அமெரிக்காவை நாடியது போல எனப்புரிக!)

உடனே அவளைப் பார்த்து விடுகிறான்- சிறிது கூடத் தாமதிக்கவில்லை. பட்டுத் தெறிக்கிறது அவன் விழி. உடனே, மகாராயராய கூளப்ப நாயக்கர், மையல் மிகவும் மிஞ்ச, தையலைப் பார்த்தபடி, தடுமாறி நிற்கிறார்! "நீரர மின்னாளோ? நிச நாககன்னிகையோ? சூரர மின்னாளோ; சுரலோக மேனகையோ?"

என்றெல்லாம் ஆச்சரியப்படுகிறார். நாககன்னிகை, மேனகை யெல்லாம் இவருக்குப் பழைய சிநேகிதிகள் போல, அவர்களை நினைவு கூறுகிறார்! உடனே கண் இமைக்கிறதா, கால் பூமியில் பாவுகிறதா என்று தேடுகிறார். ஏனென்றால் தேவலோக ஸ்டார்களுக்கு அது இருக்காதாமே! கண்டு பிடிக்கிறார். "இல்லை! இவள் பூலோகரம்பை தான் என்று முடிவு கட்டுகிறார்.

உடனே கொஞ்சங் கூடத் தயங்காமல் கேள்வி மேல் கேள்வி போட்டு, கொட்டியளக்கிறார்! ஊரேது என்கிறார்; நீர் இருக்கும் உலகேது என்கிறார்; உமது பேரேது என்கிறார்; ஒரு வார்த்தை பேசமாட்டாயோ என்கிறார், மரியாதையாக!

பிறகு, நீ ரதியா, தமயந்தியா, அகலிகையா, என்று வினவுகிறார்! இதில் அகலிகையா என்று கேட்கும் போது, அகலிகை இந்திரனை விரும்பி விரும்பிச் சேர்ந்த மாதிரி கூறுகிறான், கவி!

"அடி மதனகலாவாணி! மேகங்கள், மலையில் ஏரித்திரிவதெல்லாம் உன் கூந்தலுக்குத் தோற்றுப் போய்த்தானே! உனது நெற்றியை, தேய்ந்த பிறை என்று சொன்னால், அந்தப் பிறையில், உன் நெற்றியில் இருக்கிற மாதிரி 'சுட்டி' இல்லையே' உன்னுடைய புருவ வில்லுக்கு 'மன்மத'னுடைய கரும்பு வில் இணையாகுமா! திருமால் மீனாக வந்து வேதங்களைக் காப்பாற்றினான் என்று 'டூப்பு' விடுகிறார்களே, இனி எந்த வேதத்தைக் காப்பாற்ற, உன் முகத்தில் இரண்டு மீன்கள் இருக்கின்றன! வல்லையப்போருக் கொதுங்கேன்; வாள் வேல் படைக்கு ஒதுங்கேன்! மெல்லி நல்லீர்! உங்கள் விழியம்புக்கு அச்ச முற்றேன்! கன்னம், மாங்கனி என்றும், காது வள்ளைக் கொடி என்றும், எனக்கு உவமை கிடைத்து விட்டது! ஆனால் பல் வரிசைக்கு உவமை கிடைக்க வில்லையே!

★ வித்துருமந் தன்னையுங் க
மெல்லிதழ் என்றால், இதி
முத்தங் கிடைக்கும்! அ
முத்தம் கிடையாதே
[2] இதமான மென் மொழியீர்
இந்த முகத்துக்கோ
உபமானஞ் சொல்ல ஒரு பொ
ளும் காணேனே
சங்கழுத்தும் உங்கள் த
கழுத் தென்றால், உகிரா
அங்க முத்தும் ரேகை அ
பதிய மாட்டாதே
தோளுக்கு மூங்கிலினை சொ
னால், பெருஞ்சோ
நாளுக்கு மின்மினியை நா
லருஞ் சொல்வாரே
காந்தள் வனஞ் சென்றதுங்க
கைபோலும் தானிருக்
வாய்ந்த தவம் செய்து வர
பெறுவோம் என்றலவோ?

என்றெல்லாம் உளறிக் கொட்கிறான்.

பவளம் போன்ற இதழ் என் சொன்னால், இதழிலே முத்து கிடைக்குமாம்; பவளத்தில் கிடை காதாம். அதனால், அந்த உவமை 'டிஸ்மிஸ்' என்கிறான். சந்தி முகத்துக்கு உவமையே கிடைக் வில்லையாம்! சங்கு போன்ற கழுத்து என்றால், சங்கிலே நக பதிந்து ரேகை போடாதாம்; கழு திலே போடுமாம்! அதனால் அந் உவமைக்கு நோட்டீஸ் கொடு கிறான். தோளை மூங்கிலென்ப சூரியனை மின்மினி என்பது போல் ஆகுமாம்! காந்தள் மலர் காட்டு குப்போனதற்குக் காரணம் அவளது கை போலிருக்க வரம் வாங்குவதற் காகவாம். எப்படித்தான் அதற்குள், 'பார்ட் பார்ட்'டாக வர்ணிக்கிறான், பாருங்கள்! இதுமட்டுமா? படைப் புக்கு இலக்கணமே கூறுகிறான்! அதை பாடபேதத்தோடு, ஆபாசமில் லாமல் அடுத்த இதழில் தருகிறேன்.

---

1 'இளதனப்பெண்'—எனது பாடம்

★ வித்துருமம்—பவளம்.
2 இதமான மென் மொழியீர்.
—எனது பாடம்.

பொதுக்குழுக் கூட்ட அழைப்பு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் 20-2-55 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்கு, கோவைக்கடுத்துள்ள பேரூரில் நடைபெறும். அதுபோது பொ. கு. உறுப்பினர்கள் வருகை தந்து, நடவடிக்கைகளில் கலந்துகொண்டு, சிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஆய்வுககு வருபவை:
1. நாடகத் தடைச் சட்டம்,
2. மாநில மாநாடு.

அன்பன்,
அண்ணாதுரை
பொதுச்செயலாளர்.

வேண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 4

ஈற்றடி: "பகுத்தறிவால் ஆராய்ந்து பார்"

குறிப்பு: நேரிசை வெண்பாக்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு தேதி 5-3-55

நீதிபதி 'சகி' தென்றல் : : சென்னை-6.

★ மாங்கனி ★

கண்ணதாசன்

கூடாரத்தில் அடலேறு

குளம்மட்டும் இருந்ததங்கே; குமுத மில்லை !
குலைக்காம்பு நின்றதங்கே ; கனிகளில்லை !
களம்மட்டும் இருந்ததங்கே ; வாளைக் காணோம் !
கடைகண்டான் அடலேறு ; பொருளைக் காணோம் !

(வேறு)

பொன்னார் திருவே புதுநிலவே ! கண்மேனி
மின்னே ! கனவின் வியனுருவே எங்குற்றாய் ?

மேகங்கள் என்று விளித்ததனால் கார்கூந்தல்
காகங்கள் போலே ககனத்துப் பாய்ந்ததுவோ !

பிறையென்று கூறிப் பிணைத்ததனால் நுதல் நீல
நிறவானம் ஏறி நிற்கப் பறந்ததுவோ !

நீலமலர்ச் சோடு நிலவும் இருவிழிகள்
கோலக்கொடி ஏறக் குப்பென்று பாய்ந்தனவோ !

மாங்கீற்றுக் கன்னங்கள் வாங்கியமுத் தங்கள்சொல
மாங்காடு நோக்கியடி வைத்து நடந்தனவோ !

இட்டிட் டெடுத்த இதழ் இன்பரசம் தீர்ந்ததெனக்
கொட்டிக் குடித்துவரக் கொம்புத்தேன் நாடியதோ !

முல்லைப் படைவந்து மூண்டதெனக் கூறியதால்
பல்லெட்டு நான்கும் பறந்து கொடி யேறினவோ !

வில்லாம் இருபுருவம் வீரர்கரம் மேவிவிட
சொல்லாமலே ஓடிச் சூரர்நகர் புக்கனவோ !

சங்கே போலும் கழுத்து சத்தமிட்டுப் போர்முழக்க
சிங்கத் திராவிடர்கை சென்றேறிக் கொண்டதுவோ !

புல்லுவான் போயதனால் புலியாகத் தென்றல் வந்து
கொல்லும்வாள் போலே கொன்று மறைத்ததுவோ !

இட்டு வளைத்தவுடன் இளங்கொடிபோல் முழங்கையில்
கட்டுப்படும் இடைதான் காற்றிற் கரைந்ததுவோ !

கோர்த்துப் பிணைத்தவுடன் கொதிப்பேற்றும் கையிரண்டும்
வேர்த்துக் கரைந்துருகி விழுந்தனவோ மண்மீது !

பூம்பாட்டுப் பாடிப் பொன்மேட்டை எனக்கீந்த
மேம்பாட்டுப் பூங்குயிலே விரைந்தஇடம் எத்தோடி !

வேய்போலும் தோளில் விளையாடிக் கைதழுவிச்
சேய்போல நானணையச் சிலிர்க்குமுடல் எங்கேடி !

இன்னஇட மென்று இல்லாமல் முத்தமிட்டுக்
கன்னி யிருந்த கனியுடலம் எங்கேடி !

மெல்ல இதழ்தொட்டும் வேகமுற அணைத்தும்
பல்லைக் கடித்தபடி படித்தநூல் எங்கேடி !

தொட்டால் ஒரு சுவையும் தொடப்போமுன் ஓர் சுவையும்
கிட்டத்து நின்றால் கிளர்ச்சிதரும் ஓர் சுவையும்

பார்க்கும் விழிக்கூட்டுப் பார்வைக்கு ஓர் சுவையும்
சேர்த்துப் பிறந்த திருமேனி எங்கேடி !

பட்டால் வலியெடுக்கும் பனிமலரும் முள்ளாகும்
பட்டாடும் இருபாதம் பறந்த இடம் எங்கேடி !

முன்னடிக்குப் பாதி உயிர் முத்தாகத் தூக்கிவைக்கும்
பின்னடிக்குப் பாதிஉயிர் பெறும்பாதம் எங்கேடி !

காற்றுக்கு மேற்சென்று கணத்துக்குள் கீழிறங்கும்
நாற்று நிறப் பொற்சேலை நடிக்கும் உடல் எங்கேடி !

வண்ணார் வெளுத்து வைத்திருக்கும் வெள்ளுடைபோல்
தண்ணாரும் மேனி தவழும்இடம் எங்கேடி !

ஊரார்க்குச் சொந்த உடலாய்ப் பிறந்தாலும்
சீராரும் கற்பில் தெளிந்த உடல் எங்கேடி !

போருக்கும் கலைக்கும் பொருந்தாது என்றெண்ணிக்
காருக்குள் ஓடிக் கண்மறைத்துக் கொண்டாயோ !

வாள்தாங்கிப் போரிடுவோன் மலர்தாங்கிப் போர்புரிய
மீளான் என்றெண்ணி மெய்வெந்து மாண்டனையோ !

முத்தங்கள் கொண்டதனால் மோகத்தீ மூண்டுவிட,
கொத்தோடு அத்தீயில் கொடிவெந்து போனதுவோ !

வானத்து வெண்மதிக்கு வையத்துக் காதலின்ப
ஞானத்தை ஓதிவர நத்திப் பறந்தனையோ !

உள்ளம் விரும்பாமல் உடல்விரும்பும் தீ அரவுக்
கள்வர் உனைவருத்திக் கவர்ந்துவெளி யேறினரோ !

கல்லுடலே பேரின்பம் நாவுக்கும் மனத்துக்கும்
இல்லையதில் தொடர்பென்று எண்ணிக் கவர்ந்தனரோ !

கூட்டில் உயிர்ஆடக் குமையுமனங் கொதிப்பேற
வாட்டி எனைவருத்தி மறைந்தாயோ ! மாங்கனியே !

(வேறு)

அழுதான்; துடித்தான் ; அடுதீயிற் கெடவீழ்ந்த
புழுவாய்த் துடித்துப் பொசுங்கினான்-வழுவாத
பூங்கொடியை எண்ணிப் பொருமினான்; புதுப்பாட்டுத்
தீங்குயிலைக் கூவித்தேடினான்-ஆங்கழகுப்
பெட்டகத்திற் புத்தி பேதித்தான் ; கையிறுக்கிக்
கட்டகத்தை எண்ணிக் கதறினான்-ஒட்டுமரம்
விட்டகனி யெண்ணி விம்மினான் ; இதழமுதைத்
தொட்டசுவை எண்ணித் துடிப்புற்றான்-பட்டமரம்
ஆனேனே என்று அலறினான்; அழகிருந்து
போனஇடம் பார்த்துப் புலம்பினான் !-வானமழை
கண்ணீராய்ச்சிந்திக் கலங்கினான் ! காதழகுப்
பெண்ணலைக் காணுப் பிளை

முதல் இரவு

மெல்லியநற் பட்டாலே மெத்தை தைத்து
மேலுமொரு பட்டாலே அதனை மூடி
மல்லிகைநன் மலர்தூவி அதைமறைத்து
வாசனைகள் அறையெல்லாம் தூவி விட்டு
மெல்லியுடன் அடலேறு விளங்கப் போகும்
வேதனையில் லாப்போரின் முதல்நா ளென்று
துல்லியமாய் அலங்காரம் செய்து வைத்து
சொர்க்கமெனும் கற்பனையை உருச்ச மைத்தார் !

பாங்கியர்கள் தென்னரசிப் பாவை முன்னம்
பலகதைகள் சொல்லுகிறார்; தங்கள் வீட்டில்
தூங்குதல்போல் நடித்ததுவும், ஆளன் வந்து
தொட்டதுவும், பிற்பாடு நடந்த யாவும் ......
தாங்குமலர் வண்டுண்ணத் தளர்வு கொண்டு
தடக்கையால் அணைத்ததுவும், விடிந்த பின்னர்
ஆங்கு வளர் நகக்குறியைக் கண்டு கண்டு
அயிர்த்ததுவும் சொல்லிச்சூ டேற்று கின்றார் !

"கண்களுக்குள் தென்றல்புகும் என்றி ருப்போம் ;
கண்களைத்தன் இதழாலே மூடி வைப்பார் !
காதுகளில் தென்றல்புகும் என்றி ருப்போம்,
காதையும்தன் இதழாலே சுட்டு வைப்பார் !
மெல்லிதழைத் தென்றல்தொடும் என்றி ருப்போம்
வெடுக்கென்று வலியேறச் செய்து வைப்பார் !
கன்னங்கள் காற்றுக்குத் தெரியா வண்ணம்
கைபோர்த்தி முகமுற்றும் மறைத்துக் கொள்வார் ;

துகில்போர்த்த எழில்மேனி...ஐயோ வெட்கம் !
சொல்லேன்நான் !" என்றெருத்தி அனுப வத்தை
ஒயிலாக அபிநயத்தில் சொல்லக் கேட்டு
உயிரெல்லாம் சூடேறக் கன்னி நின்றாள் !
குயிலாக மற்றொருபெண் தனது ஆளன்
கொண்டதுவும் கொடுத்ததுவும் சொல்லிச் சொல்லி
மயிலாக நடித்திட்டாள் ! கேட்கக் கேட்க
மாதுக்கு வரப்போகும் சுகமும் தோன்றும்

"பயிலாத வித்தைக்குப் பள்ளி" என்றே
படுக்கையினைப் 'பள்ளி' எனச்சொன்னார் போலும்"
அறியாத புதுக்கன்னி இவ்வா றெண்ணி
அதிசயித்தாள் ! நேரத்தை யுகமாய்க் கண்டு
"வருவாரா ! பாங்கியர்கள் போமாட் டாரா !
மார்புக்கும் முகத்துக்கும் இனும் ஏன் தூரம் !
தருவாரே நல்லமுதம்!" என அயிர்த்து
தரையினிலே நில்லாமற் காற்றில் நின்றாள் !

அனுபவத்தின் முழுஏடு போலே வந்தாள்,
அடுக்கடுக்காய்த் திரைகொண்டோர் கிழவி ஆங்கு !
மினுமினுக்கும் முகப்பேடு அவளைப் பார்த்து
"விருந்துக்கு அழைப்புத்தாள் !" எனநினைத்து
குறுகுறுப்புப் பொறுக்காமல் "பாட்டி !" என்று
கூப்பிட்டு, "என்னையா தேடுகின்றாய் ?
இருக்கின்றேன் ! இங்குதான் !" என்றாள் ! உள்ளம்
எல்லோரும் தெரிந்தார்கள் ! சிரித்து விட்டார் !

தொட்டாற் சுருங்கியென சிரிப்புக் கேட்டு
சோதிமுகம் நாணத்தாற் சுருங்கிப் போக,
"முட்டாள்நான் ! உளறிவிட்டேன் !" எனநினைத்து
மூடினாள் கைமலரால் முகத்துப் பூவை !
எட்டாத தூரத்தில் இல்லை யேனும்
என்னவோ அவள்மனது பொறுக்க வில்லை !
"கட்டாது இனி!" என்றக் கிழவி வந்து
கைதொட்டுக் கொண்டுபோய் அறையில் விட்டாள்.

நினைவென்னும் நெருப்போடு உள்ளே வந்து
நின்றாள் ! அங் கடலேறு படுத்திருந்தான் !
சுனைதன்னில் ஒளிமின்னும் காட்சி போலும்
சுடர்மார்பன் தனைப்பார்த்தாள் ! தலைகுனிந்தாள்!
மனம்முன்னும், கால்பின்னும் உடலை அங்கே
வார்த்துவிடப் புரியாமல் நின்றாள் பேதை !
கனவெல்லாம் மாங்கனியாய், இருக்கும் மெத்தை
காணாமல் நிலைவிழியில் அவனிருந்தான்.

அழைப்பானென் றெதிர்பார்த்தாள் ; வார்த்தை யில்லை
அடிக்கடிஅம் முகம்பார்த்தாள், பூமி பார்த்தாள்
பிழைப்பாடு நாம் என்ன செய்தோ மென்று
பேச்சற்றுப் பரிதாப மாக நின்றாள்
குழைவோடு தன்னூரில் ஓரி ரவில்
கொஞ்சுஇசை கேட்டதனை நினைத்துக் கொண்டு,
"பழிகார நாணம்அன் றில்லை ! இன்று
படையெடுத்து விட்டதே !" என்ற யிர்த்தாள்!

திடமாக மனதினைத் திருத்திக் கொண்டு
சிலம்போசை அடி எண்ண நடந்து வந்து
"குடமாகத் தேனோடு நானு மிங்கே !
குளிர்காற்றும் பக்கத்தில் ! ஏன்த யக்கம்
விடமாநான் !" எனக்கூறும் பாணி தன்னில்
வெண்மனதுப் பெண்பாவை அவனைப் பார்த்தாள் ;
சடமாகக் கிடந்தஅவன் கனவை விட்டு
தடம்மாறிக் காட்சிக்கு வந்தான் ! கண்டான் !

குவளைமலர் விளிம்பில்ஒரு பனிமுத் துப்போல்
கொதிகண்ணீர் ஊறுசுகக் கடலைக் கண்டான் !
"திவலை வரச் செய்தோமே ! பாவம் இந்தச்
சிறுபயிர்தான் என்செய்யும் ! நமது உள்ளம்
கவலையெனில் அதைத்தீர்க்க இவளென் செய்வாள் !"
கன்னெஞ்சர் செய்கைக்கு மயிலா ஈடு ?
சவலைமனம் ! எனக்" கென்று கையைத் தொட்டுத்
தன்பக்கம் உட்கார வைத்துக் கொண்டான் !

சின்னமுகம் தொட்டான் ; மாங் கனியை எண்ணி
சிட்டுமுத்தம் வைத்தான்; மாங் கனிதா னென்று
பின்னும்இதழ் உண்டான் ; மாங் கனிபோல் எண்ணி
பெண்மடியில் சாய்ந்தான்; " மாங் கனியே ! " என்று
கன்னல்மொழி சொன்னான் ! மாங் கனிநா மென்று
கட்டழகி சிலிர்த்தாள் ! மாங் கனிசேர் கன்னம்
தன்னைவடுச் செய்தான்! மாங் கனியாய்க் கட்டித்
தன்மார்பில் சேர்த்தான்இச் செகம் மறந்தான் !

தென்னரசி மேனியில் மாங் கனியைக் கண்டு
தெவிட்டாமல் அள்ளிஅள்ளி உண்ட காளை,
மின்னலிடை தன்னிற்கை வளைத்த வாறு
மெய்மறந்து பட்டணையில் சாய்ந்திருக்க
கன்னி அவன் கன்னத்தில் கன்னம் வைத்து
கை, தலையைக் கோதியவா றன்புக் காட்டில்
பொன்னெடுத்துக் கண்மூடிப் புவிம றந்து
புது வார்த்தை பலகூறித் தமிழ்வ ளர்த்தாள் !

"மாங்கனி" முழுக் காவியம் வெளியிடுவோர் பாரிநிலையம் சென்னை-1

"மாங்கனி" பற்றி ....

அன்புடைக் கண்ண தாச !
அருந்தமிழ்த் 'தென்றல்' தன்னில்
இன்றுநும் காவி யத்தை
எழில்மிகு "மாங்க னி"யை
தின்றுயாம் சுவைத்தோ மந்தத்
தீஞ்சுவை முழுதும் தேவை !
தென்றலால் அப்பே ரின்பத்
திருப்பணி தொடர்க ! வாழ்க !

அ. ச. பாலு.
12-2-55 பொள்ளாச்சி

வாழத் தெரிந்து கொள்–1.

மெய் வருத்தம் பாரார், பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினர்.

சுருக்கமாக இதன் பொருள் :-
காரியத்திலே கண்ணாயிருப்பவர்கள் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டார்கள்.

வணங்காமுடி

(மாதம் இருமுறை)

விரைவில் வெளிவருகிறது

விபரங்களுக்கு :

நிர்வாகி,
'வணங்காமுடி'
S. M. L. தெரு,
தேவகோட்டை.

"எங்கெங்கேயோ சுற்றினேன். நல்ல இருட்டு. வழி தெரியவில்லை. குத்துகிற முட்களையும் லட்சியம் செய்யாது, எப்படியும் இளமரக்காவைக் கண்டுபிடித்து விடுவது என்று தேடி அலைந்தேன்.

வெகு நேரத்திற்குப் பிறகு, தூரத்தில் தீப்பந்த வெளிச்சம் தெரிவதைக் கண்டேன். அதையே வழிகாட்டியாகக் கொண்டு, விடுவிடென்று நடந்தேன். கடைசியில் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தேன்.

அந்த இளமரக்கா மிகவும் பூர்வீகமானது. ஆயிரமாண்டுகள் பழமை வாய்ந்தது. இடைதுறை நாடு ஒரு தனி நாடாக இல்லாமல், தென்னுட்டின் ஒரு பகுதியாக இருந்த காலத்தில், தென்னுட்டுப் பிரதிநிதி ஒருவன் அதை நிர்வகித்துக் கொண்டிருந்தானும். அப்போது அவன், தங்கியிருப்பதற்குக் கட்டப்பட்ட ஒரு கோட்டையும், மாளிகையும் ஒவ்வொரு தலைமுறையிலும் புதுப்பிக்கப்பட்டு வந்ததாம்.

நான் அன்று பார்த்தபோது, அந்தக் கட்டிடம் இருந்த நிலை, அதனுடைய பழமையை எனக்குக் கூறவில்லை. ஆனாலும் உண்மையென்னவோ அது தானும். அந்த இடத்தில், யாருக்கும் தெரியாமல் வெளியிலேயே நின்றேன். வாசலில் இரண்டு காவலர்கள் இரண்டு தீப்பந்தங்களை பிடித்துக்கொண்டு நின்றிருந்தார்கள். உள்ளே எங்கணும் எண்ணெய் விளக்குகள் எரிந்துகொண்டிருப்பதைக் கண்ணுடிக் கதவுகள் எனக்கு எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன.

மேல்மாடி கண்ணுடிக் கதவில் அடிக்கடி விழும் நிழல் உருவம், அங்கே மனித நடமாட்டம் அதிகமிருப்பதைக் கூறிற்று. இந்த இடத்திலே நாம் என்ன தெரிந்து கொள்ளமுடியும்; எப்படி உள்ளே போக முடியும்; பைத்தியக்காரத்தனமாக இங்கே வந்துவிட்டோமே! இனித் திரும்பிப் போய்ச் சேர்ந்தால் போதும் என்ற நிலைமைக்கு நான் வந்து சேர்ந்தேன்.

ஆனாலும் எப்படியாவது உள்ளே நுழைந்துவிட்டால், ஏதாவது கிரகித்துக்கொள்ள முடியும் என்று நம்பினேன். மாளிகையைச் சுற்றிச் சுற்றி வந்தேன். எந்தப் பக்கமும் போகமுடியும் - நுழைந்துவிட முடியும்-என்ற நம்பிக்கை எனக்கு இல்லாமலிருந்தது. உறுதியற்ற நிலையிலேயே மாளிகையின் பின் பக்கம் வந்துவிட்டேன்.

அங்கே ஒரு தோட்டமிருந்தது. என்ன காரணத்தாலோ அதற்குச் சுவருமில்லை; வேலியுமில்லை. காட்டோடு காடாக, ஆனால் சுத்தப்படுத்தப்பட்டு, பூங்கொடிகள் நடப்பட்ட தோட்டமாக அது இருந்தது. காடு என்று நினைத்து உள்ளே போன எனக்கு அது மாளிகையைச் சார்ந்த தோட்டம் என்பது அப்போதுதான் புரிந்தது.

அதன் உள்ளே நுழைந்ததும் இடை துறையான் யாருடனே பேசுகிற சத்தம் கேட்டது. பேச்சு முழுக்கக் கேட்கவில்லையானாலும், கூடப் பேசுபவன் அரிசங்கமனுக இருக்கும் என்று நினைத்தேன்.

சுருக்கமாக என் காதிலே விழுந்த சில வார்த்தைகளைக் கொண்டு, இராச இராசர் மறைவுக்குப்பின், சோழநாடு பழைய பெருமையிலேயே வாழ முடியாமல் இருப்பதாகவும், இராசேந்திரனை முழுவதும் மடக்கி தன் கைக்குள்ளே போட்டுக்கொண்டு விடமுடியும் என்றும் அரிசங்கமன் சொல்ல, அதற்கான பொருள் வசதி முழுவதையும் மாதம் ஒருமுறை பொன் கழஞ்சாகவே அனுப்பிவிடுவதாகவும், இதில் யாராவது ஒருவருடைய விஷயம் இராசேந்திரருக்குத் தெரிந்துவிட்டால், அவர் மற்றவரைக் காட்டிக்கொடுக்கக் கூடாதென்றும் இடைதுறையான் சொன்னுன்.

இடையிடையே, ஏதோ அப்பொழுதே காரியம் பலித்துவிட்டது மாதிரி, இருவரும் சிரிக்கும் சப்தம் கேட்டது. உடனே ஒருவர் தோளில் ஒருவர் கை போட்டுக்கொண்டு, இருவரும் மேல்மாளிகை சன்னலைத் திறந்துகொண்டு நிற்பதைப் பார்த்தேன். அப்படியே ஒரு செடிக்குப் பின்னுல், ஆடாமல், அசையாமல் உட்கார்ந்துவிட்டேன். நான் உட்கார்ந்ததை நிச்சயமாக யாரும் கண்டுபிடிக்க முடியாது. ஆனுல், திடீரென்று என் வாயை ஒரு கை பொத்தி, மறுகையால் தலையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. நான் திமிறிப் பார்த்தேன்; முடியவில்லை.

அந்த உருவம் அப்படியே என்னை மக்கட்டாகக் கட்டி, தூக்கிக் கொண்டு, தோட்டத்தை விட்டு, காட்டிற்கு வந்துவிட்டது. என்னை 'தொப்'பென்று கீழே போட்டது. அந்த இருளிலும் அந்த ஆளை என்னுல் ஓரளவு பார்க்கமுடிந்தது. முன்பின் அறிமுகமில்லாத உருவம்.

"நீ யார்?" என்று அதட்டியது நான் பதில் சொல்லாமல் இருந்தேன். அவன் என்கிட்ட நெருங்கினுன். நான் விலகிப்போக முயன்றபோது, என் கையைப் பிடித்தான். 'பேரென்ன' என்ருன்; பேசாமலிருந்தேன். 'ஊரெது' என்ருன்; 'இதுதான்' என்றேன். "இதுதான் என்ருல் உன்னைவிடக் கூடாது" என்ருன். நான் திகைத்தேன். கையை முறுக்கி, தூக்கி நிறுத்தினுன். "விட்டுவிடு!" என்று கெஞ்சினேன். உங்களையெல்லாம் சும்மா விடக்கூடாது என்று கருவியவன் மாதிரி காணப்பட்டான்.

பலாத்காரமாக என்னைக் கட்டிப் பிடித்தான். அவன் தீது செய்ய நினைத்திருக்கிருன் என்பதை உணர்ந்துகொண்டேன். உணர்ச்சி வசப்பட்ட அவனிடமிருந்து, தப்பித்துக்கொள்ள போராடியதில் தளர்ச்சியுற்று, கீழே விழுந்தேன். என்ன சொல்வேன் அக்கா! அதுவரையில் தந்திரத்தாலும், சாமர்த்தியத்தாலும் காப்பாற்றி வைத்துக் கொண்டிருந்த என் கற்பு, எந்த சக்தியுமற்ற நிலையிலே அங்கு பறிபோயிற்று. (இந்த இடத்தில் கமலினியின் தொண்டை அடைத்துக்கொண்டது. நந்தினி கண்ணீர் சொரிந்தாள். கருநாக மங்கை குனிந்தபடியே உட்கார்ந்துகொண்டிருந்தாள். சிறிதுநேரம் மௌனம். 'பிறகு' என்று பேச்சை ஆரம்பித்தாள் நந்தினி-கமலினி தொடர்ந்து கூறத் தொடங்கினுள்.)

பிறகு என்ன ஆகும்? நான் எழுந்து அவனைக் கண்டபடி திட்டினேன். அவன் ஒன்றிற்கும் பதில் பேசாமல் இறுதியாகச் சொன்னுன். "இந்த இடைதுறை நாட்டுப் பெண்கள் அத்தனைபேரையும் கெடுத்து, அக்கினிக்குண்டத்தில் தள்ளினுலும் என் மனம் அமைதி பெருது. மூன்ருவது பலி நீ. நான் பட்ட அவமானத்திற்கு மூன்று போதுமெனக்கு! இனி நாடு போய்ச் சேருவேன்!" என்று கத்தினுன்.

நான் ஒன்றும் புரியாமலிருந்தேன். நான் இந்த ஊர்ப்பெண் தான் என்று சொன்னபொய் அவனுக்குச்சாதகமாகஇருந்து விட்டதோ? வேறு நாடு என்று சொல்லியிருந்தால் நம்மைக் காத்துக் கொண்டிருக்கலாமோ என்று எண்ணமிட்டேன். என் பொய் சொன்னேம் என்ற கவலையோடு "உனக்கு எந்த நாடு?" என்று கேட்டேன். "சோழ நாடு" என்ருன். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"நானும் சோழநாடுதான்!" என்றழுதேன்! 'ஆ' என்ற அவன் குரலிலே நடுக்கத்தைக் கண்டேன். விழித்த விழியை இமைக்கவுமாட்டாமல் அவன் என்னைக் கூர்ந்து பார்த்தான். "இதை என் முன்னுலேயே சொல்லவில்லை?" என்று கத்தினுன். "சொல்ல முடியாத நிலையிலிருந்தேன்" என்றேன். அவன் என்தோள்களைப் பிடித்துக் குலுக்கினுன்.

"சோழ நாட்டிலிருந்து நீ இங்கே ஏன் வந்தாய், எப்படி வந்தாய், எதற்காக வந்தாய்?" என்று கேட்டான். அவ்ன் குரல் தழுதழுத்தது. "அதையும் உன்னிடம் சொல்ல முடியாது" என்றேன். "அப்படியானுல் நீ சோழ நாட்டுப்பெண் என்பதை என்னுல் நம்ப முடியாது!" என்ருன்.

"நீ யார்? என்பதை முதலிலே சொல். அவமானத்திற்கு மூன்று பலி என்ருயே, அந்த அவமானம் என்ன? அதைச் சொல்! பிறகு நான் உண்மையைச் சொல்கிறேன்" என்றேன்.

அவன் சொல்ல ஆரம்பித்தான். "இதே இடைதுறை நாட்டுப் பெண்ணொருத்தி சோழநாட்டிற்கு வந்திருந்தாள். அரிசங்கமனின் விருந்தினளாக அவள் தங்கியிருந்தாள். விருந்தினள் என்ன-விபசாரத்திற்கென்றே வந்திருந்தாள். அரண்மனையிலே நானும் ஒரு வீரனுக இருந்தேன். நானும் என் சகாக்களும் அடிக்கடி அவளை ஏரிக்கரையில் சந்திப்போம். அப்போதெல்லாம் என் சகாக்கள் அவளைக் கேலிசெய்வார்கள், நானும் அதிலே பங்குகொள்வேன். அதை

அவள் அரிசங்கமனுக்குச் சொல்ல, அவன் ஓர்நாள் என்னை ஆயுதச் சாலையில் அவமானப்படுத்தி, அவனைக் கொண்டே என்னை அறையச் செய்தான். அறைந்ததோடு என்னை, என் தாயை, என்குலத்தை பழித்துப்பேசினுள்.

"அரிசங்கமனை என்ருல் எதிர்க்க முடியாது. ஏன்! மன்னனுல் கூட எதிர்க்கமுடியாது. அவ்வளவுபலம் பொருந்தியவன். ஆகவே அவனைப் பகைத்துக் கொள்ளாமல் இடைதுறைப் பெண்களைப் பழிதீர்ப்பதில் முனைந்தேன், இதுபேடித்தனமாகக் கூடஇருக்கலாம். ஆனுல் அதுதான் என்மனதை அமைதிப் படுத்தும் போலிருந்தது. நான் அவளையும் அவள் சகோதிரியையும் தான் கொன்றேன். உன்னைக் கொல்ல விரும்பவில்லை. கெடுத்தேன்.

"இடைதுறை நாட்டு அக்ரமக்காரர்கள் இதுபோல் பலசெய்திருக்கிருர்கள். நீஇடைதுறை நாட்டுப் பெண்தான் என்ருல், நான் செய்தது தவறல்ல என்றே முடிவு கட்டுகிறேன்" என்ருன்.

"ஐயோ! நான்சோழ நாட்டுப் பெண்தான்!" என்று முழு விபரத்தையும் அவனிடம் கூறினேன், அவன் அழுதான், குதித்தான், பெருந்தவறு செய்து விட்டேனே என்று வருந்தினுன். இதற்குள் குதிரைகளின் குளம்படிச் சப்தம் கேட்டது. இடைதுறை மன்னர் புறப்பட்டு விட்டார் என்பது தெரிந்தது. பெருந்தவறு நடந்து விட்டது தான் என்ருலும், அதற்காக லட்சியத்தை மறந்துவிட நான் தயாராக இல்லை. லட்சியத்தை நிறைவேற்றிவிட்டு, அன்னையின்காலடியில் போய்விழுந்து தற்கொலை செய்துகொள்வது என்ற ஒரே முடிவுக்கு வந்தேன். அவனிடம் ஒன்றும் சொல்லாமல், விடுவிடென்று ஓடஆரம்பித்தேன். பிறகு அவன் என்ன வானுன் என்பதே எனக்குத் தெரியாது.

விடிந்த பின் தான் அந்தப்புரத்திற்கு வந்து சேர்ந்தேன்- எனக்கு முன்னுலேயே வந்து விட்ட இடைதுறையான் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தான்- "எங்கே போனுய்?" என்று கேட்டான். "உங்களைக் காணுமல் நிலவைப் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று புளுகினேன். நம்பினுன். கையைப் பிடித்து, என்னைப் படுக்கையில் உட்காரவைத்தான்.

அந்தச் சமயத்தில் அவனுலும் கெடுக்கப் படுவேனென்று தீர்மானமாய் தெரிந்தது. வேறுவழியின்றி எந்தத் தந்திரத்திற்கும் இடமின்றி எண்ணவுமின்றி இணங்கினேன், இனிஎன்ன இருக்கிறது என்றமுடிவுக்கு நான் வந்துவிட்டேன். அந்த நேரத்தில், அளவுகடந்த போதையில், அவன் அரிசங்கமனிடம் பேசிய அத்தனையையும் என்னிடம் கூறிவிட்டான். அன்று முதல் அவனுடைய ஆசைநாயகியாக இருந்து, சகல விஷயங்களையும் தெரிந்து கொண்டேன். (பிறகு இடைதுறை நாட்டை இராசேந்திரன் கைப்பற்றியது, திருப்பிக்கொடுத்தது, மீண்டும் கைப்பற்றியது ஆகிய சகல வரலாற்றையும் கூறிமுடித்தாள். தளநாயகனைச் சந்தித்ததைப் பற்றிக் கூறும்போது நந்தினி அக்கரையோடு கவனித்தாள். நீ அதிர்ஷ்டக்காரி!' என்று நந்தினியைப் பார்த்து கமலினி கூறினுள். "மன்னரும் என் காதலரும் புறப்பட்டுவிட்டார்களா?" என்று நந்தினி கேட்டாள். "'அது எனக்குத் தெரியாது. அதற்கு முன்னுலேயே இடைதுறை நாட்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டேன்!" என்ருள் கமலினி.

பிறகு தழுதழுத்த குரலோடு கமலினி மங்கையிடம், "அக்கா! இவ்வளவு விஷயங்களையும் உன்னிடம் நான் சொல்லிவிட்டேன். இடைதுறையானுக்கும் அரிசங்கமனுக்கும் நடந்த அஞ்சல் போக்குவரத்து சம்பந்தப்பட்ட ஏடுகளைக் கொண்டுவந்திருக்கிறேன். அதை உன்னிடம் தருகிறேன். நீங்களே அன்னையிடம் முழு விபரங்களையும் சொல்லி, அவற்றைக் கொடுத்து விடுங்கள். இந்த உடலோடும், முகத்தோடும் அன்னையைப் பார்க்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. என் கடமை தீர்ந்துவிட்டது. இதோ இந்த நதியே என்னைக் கொண்டு போய் விடட்டும்" என்று எழுந்தாள்.

மங்கை திடீரென எழுந்து, கண்ணீரோடு அவளை வாரி அணைத்துக் கொண்டாள். நந்தினியும் அழுது விட்டாள். மங்கை, "அன்னையைப் பார்க்குமுன் நீ சாகக்கூடாது! அந்த வாக்குறுதியை எனக்குக் கொடு!" என்ருள்.

கமலினி விம்மி அழுதபடி, "ஐயோ! நான் இருப்பதால் இனி எந்த லாபமும் இல்லை" என்ருள். உடன் மங்கை, "நீகெட நேர்ந்தது நம் லட்சியத்தினுலேதான். அதனுல், நீ அன்னையைப் பார்த்த பிறகுதான் சாகவேண்டும். நீ வாழ வேண்டுமென்று நான் விரும்பவில்லை. அந்த வாழ்க்கை உனக்குப் பிடிக்காதென்பதும் எனக்குத் தெரியும். ஆயினும், அன்னையைச் சந்திக்கும்வரை, நீ சாகக்கூடாது!" என்று கெஞ்சினுள். மனம் தேறி ஒரு முடிவுக்கு வந்த கமலினி அதை ஒப்புக்கொண்டாள்.

கண்ணதாசன்

மூவரும் கூடாரம் நோக்கி நடக்க ஆரம்பித்தனர். அதற்குள் வீரர்கள் எல்லொம் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, கூடாரங்களினருகில் ஆடிப்பாடிக் கொண்டிருந்தனர். நடந்து வரும்போது நந்தினி கேட்டாள். "இந்த ஏடுகளை மன்னரிடம் கொண்டுபோய் கொடுத்து, அவரையே நடவடிக்கை எடுக்கச் சொல்லிவிட்டால், சுலபத்தில் முடிந்துவிடுமே!"

அதற்கு மங்கை "முடியாது. அதிலேதான் பெரிய ரகசியமிருக்கிறது. இன்னும் பல விபரங்கள் சோழநாட்டிற்குத் தெரியவேண்டும். அரிசங்கமனைப் பற்றி இப்போது நாம் என்ன சொன்னுலும் மன்னர் கேட்கமாட்டார், தெரியாமலா அன்னை சாந்திமத்தீவிலே இருக்கிருர்கள்? சகல காரியங்களும் அங்கே நடந்துகொண்டிருக்கின்றன" என்ருள்.

இதற்குள் கூடாரம் வந்துவிட்டது. பிறகு எல்லோரும் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்தனர். படைகள் நடைபோடத் தொடங்கும்போது மங்கையின் பக்கத்திலே நின்ற கமலினி குதிரையின்மீது கம்பீரமாக வீற்றிருந்த ஒருவனைக் கண்டாள், கூர்ந்து கவனித்தாள். அகல விழித்தாள். "இவன்தான், இவன்தான்!" என்று கத்தினுள். மங்கை திடுக்கிட்டு அவள் கை காட்டிய வீரனைப் பார்த்தாள். அவள் முகம் கறுத்தது.

சத்தம் கேட்ட அந்த வீரன் திரும்பிப் பார்த்தான். "ஆ" என்ருன்.

(தொடரும்)

அடுத்தொரு மலர்! அழகிய மலர்!

தென்றல்

பேராசிரியர் மலர்!

"தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்"
"ஆரியம்போல் உலக வழக்கழிந்தொழிந்து
சிதையா உன் சீரிளமைத்திறம் வியந்து
செயன் மறந்து வாழ்த்துகிறேன்!"

[தமிழ் மொழிக்கும் திராவிட இனத்துக்கும் புதிய உணர்வு தந்த வீரர்களில் மனேன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் (பிள்ளை) முதன்மையானவர். எழுபது ஆண்டுகளுக்கு முன்பே இன எண்ணம் ஊட்டியவர், அன்னுர் 1855 ஏப்ரலில் பிறந்து, 1897 ஏப்ரலில் மறைந்தார். வருகிற ஏப்ரல், அவரது பிறப்பிலிருந்து நூரும் ஆண்டாக கிற்கிறது. அன்று தென்றல், ஒரு மலர் வெளியிட்டு அவரை கௌரவிக்கிறது.]

★ விலை ரூபாய் ஒன்று. விற்பனையாளர்கள் பிரதி ஒன்றுக்கு 12 அணு வீதம் முன் பணம் அனுப்பி, மார்ச் 10உக்குள் வேண்டிய பிரதிகளுக்கு பதிவுசெய்து கொள்ளவும். பிறகு குறைப்படுவதில் பயனில்லை.

★ தனி இதழ் கோறுவோர் ஒரு ரூபா ஸ்டாம்பு அனுப்பவும்.

★ மலரில் பேராசிரியர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் பலரும் எழுதுகிருர்கள்.

★ மலர் ஏப்ரல் 10உ யன்று எங்கும் கிடைக்கும்.

★ மலர் முழுச் சிறப்புடனும் திகழும.

விலை ரூ. 1 எப்ரல் 10உ

"தென்றல் பேராசிரியர் மலர்"

நினைவிருக்கட்டும்!

தென்றல்

சென்னை-6.

"தென்றல் திரை" படித்தீர்களா?

சிரிப்புத்தான் வருகுதையா!

"**த**மிழர் திருமணத்தில் தாலி உண்டா?" இந்தப் பிரச்சினை, ஒரு கலாட்டா செய்து, கடைசியில், டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் முழு ஆராய்ச்சியோடு, "பழைய நாளில் இல்லை" என்று முடிந்து விட்டது. இப்போது, ஒரு பேராசிரியர் (வெ. சு. சுப்பிரமணியாச்சாரியார் என்பவர்), "தாலி உண்டு!" என்று 'புராண'ங்களைப் புரட்டுகிறார். வரலாற்று ஆராய்ச்சி செய்த முடிவை, புராண ஆராய்ச்சியால் எதிர்க்கிறார்! அதாவது அனுகுண்டை, காற்றால் எதிர்ப்பதுபோல. இந்த அச்சாரியாருக்கு "புத்தி பேதலித்துவிட்டது!" என, கல்லூரி மாணவர்கள், முன்பே முடிவு கட்டிவிட்டனர். காரணம், "கண்ணகி பத்தினி அல்ல!" என்று சிலப்பதிகாரத்தைச் சாடிய "கீழ்ப்பாக்கம் எஸ்கேப்!" இவராகும்! இவரும் பொற்கொல்லன் வகுப்பைச் சேர்ந்தவராம். சிலப்பதிகாரத்திலே பொற்கொல்லனைத் திருடனாக்கிக் காட்டப்பட்டிருக்கிறதாம். அதனால் சிலப்பதிகாரத்தையே தொலைத்துவிட 'கோவணம்' கட்டினார்! எனக்கு இதில் ஒரே ஒரு ஆச்சரியம்! ஒருவேளை, இவர் அந்தப் பழைய பொற்கொல்லனின் மறு அவதாரமாக இருக்குமோ என்பது தான்! அது. இல்லையென்றால், 'அதே காரியத்தை' இவர் எப்போதாவது செய்திருப்பாரோ! —என்றும் சந்தேகம் எழுகிறது.

அடாடா! இவரிடம் படிக்கும் மாணவர்களை, அந்த 'ரேப்கேஸ் வீரன்' தான் (அதாவது கடவுள்) காப்பாற்ற வேண்டும்.

இவரது தாலி ஆராய்ச்சிக்கு ஆதாரம் எது? முன்பு சொல்லப்பட்டு, மேற்கோளோடு மறுக்கப்பட்ட அனைத்தும் ஆகும்! பின் ஏன் மீண்டும் உளறுகிறார்? பித்த முதிர்ச்சி எனப் பொருள் கொள்க! 'களவுமணம்' என்பதை இவர், "கற்பிழந்த பெண்களை ஏற்றுக் கொள்ளச் செய்யப்பட்ட விதி!" என்கிறார். உதாரணத்துக்கு, பாகிஸ்தானில் அவதியுற்ற 'இந்து'ப் பெண்களை ஏற்றுக்கொள்ளும்படி காந்தியார் கூறிய கூற்றைக் காட்டுகிறார்- கடைச்சங்க காலத்து இலக்கியமெல்லாம் இதையொட்டி எழுந்ததே என்கிறார். இதில் 'தாலி' எப்படிக் கிடைக்கும் என்று கம்பீரமாக வினவுகிறார். இந்த ஆராய்ச்சிக்குப் பரிசாக, நல்ல ஆட்டுமூளை கொஞ்சம் வாங்கி வந்து இவருக்குக் கொடுக்கலாம்! நான் படித்த முதல் ஆராய்ச்சி இதுதான்! இந்த ரீதியில் ஐயோ! தமிழ்நாடே! ஆறும் அறிவற்ற ஆட்டையும் மாட்டையும் படைத்து, இவரை என் செயப் படைத்தாய்.

இதுவரை நினைக்கும் போது எனக்கு நேரே எண்ணம் ஓடுவது குருசாமியிடம் தான்! அதாவது, ஏமாற்றத்தில் ஊசி எழுத்து, 'இன்னதென்றறியாமல் தன்னையும் உணராமல்' எழுதித்தள்ளும் 'கோமாளி உலக பூபதி' திராவிட முக மூடர் (அதாவது, மூடர் என்றால், மூடுபவர் என்ற பொருளைத் தெற்றென அறிக' இது 'காரணஆகுவினைப்பெயர்' என்பது புது இலக்கணம்) என் குருசாமி அவர்கள்! சிலப்பதிகாரத்தை சுப்ரமணிய ஆச்சாரியார் தாக்கிய போது இவர்தான் தாளம் போட்டவர். தாளம் போடும் கலை இவருக்கு கை வந்த கலையாகும்! சரியான சால்ராச் சாமி!

"காக்கை வெளுப்பு!"—போடு தாளம்!
"கழுதை தான் குதிரை!" தட்டு சாமி தட்டு!
"அம்மையை மணப்பேன்!" ஐயா வாழ்க!
"பொம்மையை உடைப்பேன்! போடுராஜா போடு!
"கம்யூனிஸ்ட் வாழ்க!"—வாள் வாள்!
"உடனே ஒழிக!"—நாசமாய்ப் போக!
"குரு! கூஜா தூக்கு!" காப்பி வேணுமா, தண்ணி வேணுமா அம்மா!
"நீ பேசாதே! நீ அயோக்கியன்!" —நல்லது குரு நாதா!
"நீ என்ன எழுதிக் கிழிக்கிறே! வெங்காயம்!" ஹி ஹி! ஹி ஹி!
"நாடகம், சினிமா ஒழிக!" நீடூழி ஒழிக'
"நாடகச் சட்ட எதிர்ப்பு!" விடாதே! பிடி!

இன்னேரன்ன பிற! புரிந்தார்க்குப் புரியும்! புரியாதார் ஒழிக. என்ன இருந்தாலும் குருசாமி குருசாமிதான்! ஒரு வருடத்து 'விடுதலை' யை எடுத்து வைத்துப் பாருங்கள் — தினவாரியாகப் புரட்டுங்கள்! மயக்கம்! வரும் குழப்பம் மிகும்! தலைவலிக்கும்! "என்னடா இது! நேற்று ஒரு கொள்கை! இன்று ஒரு கொள்கை!" என்கிற கலக்கம் உயிரை எடுக்கும்! அவரைப் பின்பற்றுகிற தொண்டர்களுக்கு மட்டும் அது புரியாது! காரணம் பெரியார் முன்பு எதிர்பார்த்த 'கல்யாண குணங்கள் யாவும் அவர்களிடம் சரிவரப் பொருந்தியிருக்கிறது!

ஒரு நாள் திடீரென்று விடுதலையைப் புரட்டினேன். "ஐவருக்குக் கேள்விகள்!" என்று போட்டிருந்தது. அதிலே ஐவரையும் 'பஞ்ச பாண்டவர்கள்! என்று விளக்கியிருந்தது. எழுதியது 'திரௌபதி' யோ என்று பார்த்தேன். இல்லைகுத்தூசிஎன்றிருந்தது! திரௌபதியின் லட்சணங்களை எண்ணிப்பார்த்தேன். பொருந்த வில்லை. அதனால் திரௌபதியே இந்தப் புனைபெயரில் எழுதியிருக்க முடியாது என்கிற முடிந்த முடிவுக்கு வந்தேன்! (புரியுதோ) என்ன கேள்விகள்? "போராட்டம் எப்போது! பெரியார் கூப்பிட்டால் வருகிறேன் என்றீரே, மற்ற வற்றிற்கும் பெரியாரையா கேட்டீர்!" இன்ன பிற! அண்ணாதுரைக்கு சவால் விடுகிறமாதிரி நினைப்பு! அவுட்டு ரங்கர் இங்கே தான் கொன்று திற்க்கிறார்! "பெரியார் என்ன சொல்கிறார்? என்று அண்ணா கவனிப்பதில் எப்போதும் ஒரு ராஜ தந்திரம் உண்டு. அது இந்தப் 'பால்சாமி'க்கு எங்கே புரியும்! (பால் சாமி என்றால் வெளுத்ததெல்லாம் பால், என்று நம்பும் புத்திசாலிகளை குறிக்கும் அழகு பெயர்.)

இன்றைக்கு வரையிலே அந்த ராஜதந்திரத்தில் அண்ணா தோற்றதில்லை. (யார் தோற்றது என்பது அனாவசியம்!)

மற்றும், 'இதுஎது?'என்றுதேடி தி. மு. கழகத்தாரை துரோகிகள், கட்சியை விட்டு விரட்டப்பட்டவர்கள் என்று கம்பீரமாகக் கண்டுபிடிக்கிறார்! 'அடேயப்பா! இந்த 'புல் புடுங்கி மஸ்தான்' விரட்டி விட்டாராம்! ஏர்க்காடு மலைக்குத் தூது போய் திருமணத்தைக் கண்டித்து' பெரியாரால் 'டோஸ்' கொடுக்கப்பட்டு, 'உத்தியோக நிமித்தம்" திருமணத்தை ஆதரித்த, "சிந்தாதிரிப்பேட்டை நைனா" போடுகிறார் பாருங்கள்! உலகத்துள் அடங்கிய யாவரும் மடையரோ இதை நம்ப!

"குருசாமி பீ.ஏ.; நான் எம். ஏ!" என்று அண்ணா சொன்னாராம். இவர் அதைத் தூக்கி வைத்துக் கொண்டு, நான் 'பீ.ஏ.நான் பீ.ஏ.' என்கிறார்!"படித்தால் போதுமா?" என்று கேட்க வேண்டாம்! பகுத்தறிவு வேண்டாமா"? என்று வினவ வேண்டாம் "அண்ணாதுரையின் தெளிந்த அறிவில் ஊசிமுனை யாவது உமக்கு உண்டா?" என்று கேட்பதும் தேவையற்றது.!

காரணம், இது உலகறிந்தது!

இவரை நினைக்கும் போது இவர் பக்கத்திலேயே இன்னொரு தினப் பத்திரிகை ஆசிரியர் நிற்கிறார். அவர்பெயர் தான் ஆதித்தன்! இவருடைய தலை சென்னையிலே பிறந்ததுகால் மதுரைப்பக்கம் பிறந்தது என் இப்படிச் சொல்கிறேன் என்றால்இவர் போடுகிறசெய்திக்கும் தலைப்புக்கும் சம்பந்தம் இருக்காது! இவர் சாத்தான் குளம் தொகுதியில் தேர்தலுக்கு நிற்கிகிறார். இவரது காலை, வெற்றியும், தலையைத் தோல்வியும் கவ்விக் கொள்ளும் என்று எதிர் பார்க்கலாம்.

வக்கீல்: கனம் நீதிபதி அவர்களே! இந்த வழக்கைப்பற்றி விஸ்தாரமாகப் பேசலாமென்றிருக்கிறேன். ஏனென்றால் இது ஒரு விபசார வழக்கு. கேடுகெட்ட விபசாரியின் கதை. ஆகையால், இதைத் 'தினத்தந்தி' கூர்மையாகக் கவனித்து வெளியிடும் என்பது எனக்குத் தெரியும்.

எங்கள் வெளியீடுகள்

முடிசாய்ந்தது—E.V.K. சம்பத்	1 4 0
முஸோலனி—V. சிவப்பிரகாசம், B.A.	0 10 0

மற்ற நிலைய வெளியீடுகளும் கைவசம் உள்ளது.

வியாபாரிகட்கு தக்க கழிவு உண்டு

சேலம் விற்பனை உரிமை:

தென்றல் திரை, தனி அரசு.

விபரங்கட்கு:

நீலா நிலையம்

புத்தக வெளியீடு—விற்பனை

சேரிரோட் : : சேலம்.

சிறந்த தமிழ் நூல்கள்!

கவிஞர் கண்ணதாசன் எழுதிய

ஈழத்துராணி	1—0—0
கூட்டுக் குரல்	1—0—0
தமிழர் திருமணமும் தாலியும்	0—6—0
இலக்கியத்தில் காதல்	1—4—0

காரைமுத்துப்புலவர்

'எமிலிஸோலா' வின் ஒப்பற்ற நாவல்

தெரெஸா (172 பக்கங்கள்)	2—0—0

தமிழாக்கம் : குயிலன்

அருணோதயம்

13, கல்லண்ண முதலி சந்து, ராயப்பேட்டை

சென்னை-14.

களங்கம்!

ஏ. கே. வில்வம்

மொட்டவிழ்ந்த வண்ணமலர்கள் தூவப்பட்டிருந்த பஞ்சணைமேல் சாய்ந்தபடியே உட்கார்ந்திருந்தான் அலாவுதீன் கில்ஜி! அவன் சிந்தனைகள் சுழன்றுகொண்டிருந்தன. வேற்றுநாடுகளில் புகுந்து அவன் கொள்ளையடித்து வந்த தங்கப் புதையல்கள்-முத்து-பவழம்வைரம் கோமேதகம் இப்படிப் பலப்பல பொருள்கள் குவித்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு தனக்குள் சிரித்துக்கொண்டான்! அதோடு நாளை அல்லது மறுதினம் வரப்போகும் பெருஞ்செல்வக் குவியல்களை எண்ணி பூரித்துக்கொண்டிருந்தான்! காரணம் தன் ராணுவத் தலைவன் மலிக்கபூரை கொள்ளையடித்து வரும்படி தட்சிணத்தின் மீது ஏவி இருந்தான். மலிக்காபூரின் வரவை ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது அவன் விழிகள்.

அதற்குள் அவன் நினைவு வேறெங்கோ தாவிற்று. எழுந்தான், அந்தப்புரம் நோக்கி நடந்தான்!

அலாவுதினின் அந்தப்புரம் ஒரு அழகு மண்டபம். அங்கே அழகியர் வெண்புருக்களென குவிந்திருப்பார்கள். வேளைக்கொருத்தி, விதவிதமான அழகிகள் அவனுக்கு விருந்தளிக்கக் காத்திருப்பார்கள்! என்றாலும் அவனுக்கு தணியாத வேட்கை! கண்ணில் பட்ட கட்டழகியரை யெல்லாம் கட்டிலறைக்குக் கொண்டுவந்து சேர்ப்பான். இப்படி அவன் அந்தப்புரம் காமக்குளமாக இருந்தது.

தாரகைத் தோட்டத்தில் ஒரு முற்றிய நிலவுபோல அந்த மங்கையர் கூட்டத்தில் ஒரு பெண்ணழகி பொன்கதிர் இழைத்த சேலை போர்த்தி இருந்தாள். தோகை விரித்தாடி வரும் அழகு மயில் போல, சித்திரத்திற்கொப்பான அந்த சிங்காரி மெல்ல எழுந்தாள், அன்னம்போல நடந்தாள், மென் காற்றால் அவள் மேலாடை நழுவுவதற்கும் - அலாவுதீன் அவளை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது.

அவள் உடலிலிருந்து வழிந்த சேலைத்தலைப்பை இவன் எடுத்து அவள் தோளில் போட்டான். அவள் லேசாகச் சிரித்தாள். அவள் ரோஜாப்பூக் குழிக்கன்னங்களை மெல்ல பற்றினான். பொன்பூத்த அவள் கன்னங்களில் சிவப்பு குவிந்தது! மன்னன் கண்பூத்துப்போனான். மங்கை முகம் மலர்ந்தது முழு நிலவானாள்!

சுற்றி நின்ற பெண்கள் சிட்டெனப் பறந்து போயினர்.

குளிர் தென்றல் - கட்டழகியின் காதல் தரும் இன்பம், மன்னன் மயங்கிப்போனான். ஒய்யார நடை போட்டு வந்த மங்கையின் துடியிடை ஒடிந்தது. மஞ்சத்தில் அப்படியே சாய்ந்தாள். மன்னன் போதைக்கடலில் தடுக்கிவிழுந்தான்.

ஆடல்-பாடல்-அமளி- சிரிப்பொலி நீண்ட அமைதி. காலைமலர்ந்தது, மதுக்கிண்ணங்கள் உருண்டு கிடந்தன. உடைந்த வளையல்கள் இறைந்து கிடந்தன. சோர்ந்த பனிச்சிலையென மஞ்சத்தில் சுருண்டு கிடந்தாள் அந்த அழகி.

இப்படி அலாவுதீன் இன்பக் கேணியாக இருந்த அவள், குஜராத் மன்னனின் பட்டத்து ராணியாக இருந்தவள். மூண்ட ஒரு பெரும் போரில் மாற்றானை எதிர்க்கமுடியாமல் தோற்றுப்போய், அப்பொழுது தேவகிரி மன்னனாக இருந்த ராம தேவனிடம் அடைக்கலம் புகுந்து விட்டான் குஜராத் மன்னன். வீரமில்லாத ஒரு மன்னனின் பட்டத்து ராணியாக இருக்க விரும்பவில்லை அவள். தன் கணவனை புறமுதுகிட்டோடச் செய்த அலாவுதீனைக் காதலித்தாள், விருந்தூட்டினாள். இந்த தகாத செயல் பெண் இனத்திற்கே மாபெரும் களங்கம் இழைத்த அந்த கட்டழகியின் பெயர் சந்திரிகா. பார்த்தால் பசி தீரும் பேரழகி! தங்கத்தைப் பழிக்கும் பட்டுத் திருமேனியாள். அவள் சிரித்தாள் சிவந்த ரோஜா சிரிப்பது போல் இருக்கும். பொதுவாக அவள் மங்கையர் குலமணிமகுடம்!

இந்த ராஜபுத்திரப் பேரழகிதான் முகலாய மன்னன் அல்லாவுதீனை பம்பரம்போல் ஆட்டிவந்தாள். அவள் சிந்தும் குளிர்மொழியிலே அவன் குவலயத்தை மறந்தான். அவள் பார்வை மழையிலே அவன் சிந்தை குளிர்ந்தான். இப்படி அலாவுதீனின் அந்தப்புரம் கோலாகலமாக இருந்தது.

"மானங்கெட்டவனே! உனக்கு வாழ்வு ஒரு கேடா! மாற்றான் மடியிலே சுகங் காண்கிறாள் உன் பட்டத்துராணி! நீ ஒரு மனிதனாக உலவிக்கொண்டிருக்கிறாய்!" இப்படி ஆயிரம் குரல்கள் அவனைப் பார்த்து சிரிப்பதுபோல் உணர்ந்தான் அவன்.

ராமதேவனிடம் அடைக்கலம் புகுந்த குஜராத் மன்னன் தன் மனைவி தனக்கிழைத்த கொடுமையை-துரோகத்தை எண்ணி எண்ணி கண்ணீர் வடித்தான். தன்மானம் அவன் உடலை அரித்து வந்தது. தன் பட்டத்து ராணியாக இருந்தவள் ஒரு முகலாயன் மடியிலே சுகம் காண்கிறாள், என்ற வேதனை அவனை நடைப்பிணமாக்கிற்று. மன நோய் அவன் உயிரை விழுங்கி விட்டது. அவன் சாகும்பொழுது ராமதேவனை அழைத்து தன் ஒரு மகள் அன்பின் இருப்பிடமான தேவலா தேவியை காப்பாற்றி-அவளுக்கு திருமணம் செய்து வாழ விட்டால் போதும் அப்பொழுதான் தன் ஆத்மா சாந்தியடையும் என்று வேண்டிக்கொண்டான்.

இராமதேவனும் தன் நண்பனை குஜராத் மன்னனின் மகளை தன் மகளெனப் பாவித்து அன்புடன் வளர்த்து வந்தான்.

★

"தேவி! குஜராத்திலிருந்து ஒருவர் வந்திருக்கிறார் உங்களைக் காண வேண்டுமாம்!"

"அப்படியா-வந்திருப்பது...!"

"ஒரு ஆண்."

"அது இருக்கட்டுமடி வாலிபனா? வயயோதிகனா?"

"ஆணழகன்"

"சீக்கிரம் அழைத்து வா" தோழியிடம் இப்படிக் கூறி விட்டு வேகமாக சென்று நிலக்கண்ணாடி முன் நின்று தன்னைத்தான் ஒரு முறைப் பார்த்துக்கொண்டாள்! அதற்குள் காலடி ஓசை கேட்டு திரும்பினாள்! திடுக்கிட்டுப் போனாள்; தன் முன்னாள் கணவரின் மெய்க் காவலனாக இருந்த சின்னா எதிரில் நின்றான். அதிர்ச்சியை அலட்சியச் சிரிப்பாக்கிக் கொண்டாள் சந்திரிகா!

"யார் நீ! எங்கு வந்தாய்!"

"தெரியவில்லையா தேவியாரே!"

"நல்ல வேடிக்கை - என்ன உளருகிறாய் மரியாதையாகசொல்லிவிடு! ஏன் வந்தாய் என்ன வேண்டும்!"

"பெண்களுக்கு இருக்கவேண்டிய பண்பு உங்களிடம் இருக்க வேண்டும் இதை கூறிவிட்டுப் போகவே இங்கு வந்தேன்!"

"சின்னா! யாரிடம் பேசுகிறாய் என்பதை உணர்ந்து பேசு! புறமுதுகிட்டு ஓடிப்போன கோழை ஒருவனின் மனைவியல்ல நான்! இப்பொழுது பாதுஷாவின் அன்பிற்குப் பாத்திரமானவள்!"

"அவமானம் அரசியாரே! பேரவமானம்! ராஜபுத்திர வம்சத்திற்கே உங்களால் களங்கம் ஏற்பட்டுவிட்டது"

"அளவிற்கு மீறிவிட்டாய் சின்னா?"

"இல்லைதேவி! கிளி பிணத்தைக்கொத்தக்கூடாது என்கிறேன்"

"ஆம்! நான் கழுகாகத்தான் மாறிவிட்டேன்."

"ரஜபுத்திர ராணியே! தகாத நினைப்பு-கூடாத ஆசை! வேதனை நிறைந்தது உங்கள் விபரீத முடிவு. வந்துவிடுங்கள், என்னுடன் அன்று பிறைநிலவாக உங்கள் பாசமடியிலே தவிழ்ந்த தேவலாதேவி எழில் சொட்டும் முற்றிய நீலவாகி இருக்கிறாள். இன்றளவும் உங்களைப் பற்றி அவளுக்கு ஒன்றுமே தெரியாது. அரசியாரே! தாயகத்தின் மானம் பறிபோகக் கூடாதே என்பதற்காகக் கூறுகிறேன். ராஜ விசுவாசத்தால் வேண்டுகிறேன். தக்க சேனைகளோடு வந்திருக்கிறேன். புறப்படுங்கள்! இன்றிரவே வெளியேறி விடலாம்."

இன்பத்தைவிட்டு என்னை பிரிக்கப் பார்க்கிறான். இனியும் இவனுடன் பேசிக்கொண்டிருந்தால் மனம் மாறும் என்றெண்ணிய சந்திரிகா "யாரங்கே?" என்று கைதட்டிக் கூப்பிட்டாள்.

இதை உணர்ந்த சின்னா.

"உங்களுக்கு அவ்வளவு சிரமம் தரமாட்டேன் அரசி. நானே போகிறேன். திரிந்தபால் ஆகிவிட்டிருக்கிறது உங்கள் மனம். உடைந்த வீணையாகி விட்டிருக்கிறது உள்ளம், கடலில் கை தவறிவிட்ட முத்து நீங்கள்.........வருகிறேன் தேவியாரே! வருகிறேன்!" என்று கூறும்பொழுது அவன் கண்களில் நீர் அரும்பி வழிந்தது.

மெய்க்காப்பாளனின் சொற்கள் அவளை அணு அணுவாகச் சிதைத்தது. வேதனைசுமை தாங்கமுடியாமல் முகத்தை தலையணையில் புதைத்தபடியே மஞ்சத்தில் சாய்ந்துவிட்டாள்.

இப்பொழுது அவள் நினைவெல்லாம் தன் மகள் தேவலா தேவியின் மீது சென்றது. தன் மகளை ஒரு முறைப் பார்க்கவேண்டு மென்ற ஆசை எழுந்தது: சிறு வயதில் விட்டு வந்த தன் மகள் இப்பொழுது கட்டிளங்குமரியாக மாறியிருப்பாள் என்று தனக்குள் எண்ணிக் கொண்டு - எப்படியும் தன்மகளை இங்கு அழைத்து வரவேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள்: தன் எண்ணத்தை ஆசைநாயகன் அலாவுதீனிடம் சொன்னாள்.

கட்டிளங் குமரி என்றதும் அவன் நாக்கில் நீர் சொட்டியது: 'இப்படியிருப்பாளோ' 'அப்படியிருப்பாளோ' என்று தனக்குள் எண்ணிக் கொண்டான் அந்த காம வெறியன். அதற்குள் பலப்பல திட்டங்கள் தீட்டி விட்டான்.

மலிக்காபூரின் தலைமையில் ஒரு படையை அனுப்பி தேவலா தேவியை இராம தேவனிடமிருந்து மீட்டு வரும்படி ஏவினான் அலாவுதீன். 'குஜராத்தின் பட்டத்துராணி முகலாயன் ஒருவனுக்கு முத்த விருந்து படைக்கிறாள்' என்று ஊர் பேசும் கேலிப் பேச்சுக்களையும். 'வம்சத்திற்கு ஏற்பட்ட இந்த களங்கத்தை துடைக்க முடியா விட்டால் எல்லோரும் தீயில் விழுந்து சாகலாமே' என்ற வெளிநாட்டு மன்னர்களின் ஏச்சுக்களையும் கேட்டு தணர்புழுவெனத் துடித்தான் சின்னா.

★

அதுவரை ஒன்றும் தெரியாதிருந்த தேவலா தேவிக்கு விஷயம் விளங்கிற்று. இத்தனை நாட்களாக தான் ராமதேவனின் மகள்தான் என்று எண்ணியிருந்த தேவலா-தான் மாண்டுபோன குஜராத் மன்னனின் மகள் என்றும்-தன் தாய்-அலாவுதினின் அணைப்பிலே இன்பம் காண்கிறாள் என்ற செய்தியையும், அறிந்த அவள் மனம் கொதித்தது.

தான், விபசாரியாகிவிட்ட ஒருத்தியின் மகள் என்பதை நினைத்து

(11-ம் பக்கம் பார்க்க)

வெண்பாப் போட்டி

2. என்றும் இளமை இவர்க்கு!

வெண்பாப் போட்டி 2-ன், பரிசு பெற்ற வெண்பாவும், பிரசுரத்திற்குத் தகுதியுடைய வெண்பாக்களும் சென்ற இதழில் பிரசுரமாயின; தகுதியுடையன சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டுள்ளோம்.

நாட்டுக் குழைத்திடுவோர் நன்னூல் படைத்திடுவோர்
பாட்டில் பகுத்தறிவைப் பாய்ச்சிடுவோர்--வீட்டொளியே;
குன்றொளியாம் தேவன் குறள்போல உள்ளமது
என்றும் இளமை இவர்க்கு.

— இரா. சிவஞான வள்ளல், வேலூர்.

★

அன்புதனைக் கொண்டு அறங்கள் பலபுரிந்து
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தானினைந்து-மன்னுயிர்க்கு
நன்று பலபுரிந்து நல்லுயிரை நீத்திடினும்
என்றும் இளமை இவர்க்கு.

— க. அருணகிரி, வரகூர்.

★

புரட்சிக் கவிஞர் புதுவைவாழ் வீரர்
குருட்டுச் சமுதாயக் கொள்கை--விரட்டிநிதம்
தன்கொள்கை போற்றித் தமிழூக் குழைப்பதால்
என்றும் இளமை இவர்க்கு.

— நரசிம்மன், சிருவாக்கூர்.

★

போரிற் புறமுதுகிட் டோடாப் பொரவலரும்
மார்பிற் கணைபட்டு மாண்டாரும்--சேர்மையே!
குன்று பெயர்ந்தாலும் குன்றாப் புகழுடையார்
என்றும் இளமை இவர்க்கு.

— கு. வை. மருத்துமாமலை, திருநகரம்.

★

உள்ளத்தால் பொய்யாது உண்மை நெறிநிற்பார்
உள்ளுவரோ ஓர்குலத்துக் கோர்நீதி ?--கொள்ளுப்பால்
பொன்றும் உயிர்எனினும் பூதலத்தார் நெஞ்சிடத்தே
என்றும் இளமை இவர்க்கு.

— ஆர். கே. நாராயணசாமி, தரங்கம்பாடி.

★

தாடி நரைத்ததால் தன்கைத் தடிவலியால்
நாடி நடப்பதால் நந்தலைவர்--வாடித்தான்
நின்றாரென் றேநீ நினையேல்; உணர்வுகாண்!
என்றும் இளமை இவர்க்கு.

— எஸ். பஞ்சநாதன், வே. துரையூர்.

★

கற்றுத் தெளிந்திருந்தும் கற்றோமென் னும் பெருமை
அற்றவர் அண்ணா அதனாலே--நற்றமிழா!
குன்றும் கடலும் குவலயத்தில் உள்ளமட்டும்
என்றும் இளமை இவர்க்கு.

— எஸ். ஏ. கண்ணன், பெரியநத்தம்.

★

செந்தீயிற் சுட்டெரித்தார்; நஞ்சிட்டார்; சந்தையில்
நிந்தித்தார் சிந்தையிலார்; செம்மையோர்--தொந்தரவில்
சென்றொழிந்தா ரென்றாலும் செம்பொன்னே தொல்புகழில்
என்றும் இளமை இவர்கரு.

— இசைச் செல்வன், அம்பத்தூர்.

★

ஈன்றாள் பெரிதுவக்க ஈந்தார் திருக்குறளை
சான்றோர் தமக்குரிய சால்பினுக்கு--சான்றாக
நின்று மறைந்தாலும் நீள்புகழால் நானிலத்தில்
என்றும் இளமை இவர்க்கு.

— முருகு, வரகூர்.

★

கொன்றன்ன இன்னா செயினும் பெரியாரே
நின்றுதங் கொள்கையை நாட்டுபவர்--வென்றிகொள
நன்றே அடலேறாய் நாளும உழைப்பதால்
என்றும் இளமை இவர்க்கு.

— க. பாலகிருஷ்ணன், சென்னை 30.

என்றென்றும் சொற்போர்க் கிளையாத மாவீரர்
வென்றொழிப்பார் தீயவையாம் வேதமுறை;--இன்னுடல்
குன்றினும் உள்ளங் குலையாத தன்மையினால்
என்றும் இளமை இவர்க்கு.

— இராம. சுந்தரம், மதுரை.

★

அன்புடைமை கொல்லாமை வாய்மையென் றிம்மூன்றும்
பண்பாகக் கொண்டிட்டார் புத்தரும்--துன்பகற்றி
ஒன்றினர் காந்தியு மேசுவு மாதலால்
என்றும் இளமை இவர்க்கு.

— ஜி. இராசமாணிக்கம், பட்டுக்கோட்டை.

★

வாழ்ந்தும் தனக்கென்று வாழாதார்! செல்வத்தால்
தாழ்ந்தும் தலைவணங்காச் சான்றோர்கள்--மாய்ந்துலகில்
சென்று மறைந்தாலும் தீப்பகையாற் காய்ந்தாலும்
என்றும் இளமை இவர்க்கு.

— எஸ். மரகதம் சீனிவாசன், பாப்பாரபட்டி

★

இன்பத் திராவிடத்தின் ஈடில்லா நற்றலைவா
அன்பர்க் கெலாமன்பர் அண்ணாவே--தென்புலவா
குன்றுங் குறைந்து குணகடலும் ஓய்ந்திடினும்
என்றும் இளமை இவர்க்கு.

— வி. ரங்கநாதன், செங்கல்பட்டு.

★

முற்றத் துறந்தார் முனியாகார் நற்றமிழின்
பற்றடைந்தே நூல்கள் பலவியற்றி—அற்புதமாய்
என்னினத்தா ருள்ளமர்ந்தார் ஏந்தல் திரு.வி.க.
என்றும் இளமை இவர்க்கு.

— துரை. சுப்பிரமணியன், மேலைச்சிவபுரி

★

மன்னும் அறநூல் வகுத்தார்க்குத் தன்தேயம்
தன்னை விடுதலை செய்தார்க்கு—இன்முகங்கொண்
டென்றும் கொடுத்தார்க் கெதிர்காலம் சென்றாலும்
என்றும் இளமை இவர்க்கு.

பா. வேலன், கோவை.

★

சாகா இலக்கியத்தைச் செய்த கவிவாணர்
சாகாத கொள்கைக்கே செற்றவர்கள்--பாகான
கன்னித் தமிழ்போல காலம் பலகடந்து(ம்)
என்றும் இளமை இவர்க்கு.

— தி. சு. சிவஞானம், கோவை.

★

ஒல்லும் வகையெல்லாம் ஆரியந் தேய்ந்திடவும்
வல்லிதின் தென்மொழி ஓங்கிடவும்--சொல்லுதமிழ்
தன்னாட்சி எய்திடவும் தென்னாட்டில் செய்யுங்கால்
என்றும் இளமை இவர்க்கு.

— துரை. ஆனந்தன், மேலைச்சிவபுரி

★

ஆண்டுபல வாயிடினும் ஆரியம் போல் செத்தொழியா
மாண்ட தமிழினமே மாநிலத்தை--ஆண்டிடுதல்
நன்றென் றுழைப்போர் நரைமுதிர்ந்தோ ராயிடினும்
என்றும் இளமை இவர்க்கு.

— மு. வ, கண்டறச்சேரி

★

வாட்டுபசி நீத்தார் வறுமைநோய் கொன்றொழித்தார்
ஏட்டால் எதிர்குறையைக் காட்டினார்--நாட்டினில்
நன்றும் பல செயலும் நாட்டினார் வாழ்வாயின்
என்றும் இளமை இவர்க்கு.

— புலவர். இரா. சித்தனார், சேலம்

★

வானம் இடிந்தாலும் வையம் கவிழ்ந்தாலும்
ஈனத் தொழில்நாடும் இல்மதியார்--வீணான
தன்செயலைச் செய்ய சளைப்பரோ? தூற்றுலகில்
என்றும் இளமை இவர்க்கு.

— இரா. சண்முகம், பண்ணைக்கா

★

குன்றாத வீரமும் குற்றமில் நல்மனமும்
பொன்றாத நற்செயலும் பூங்கொடியே--மன்றினில்
நன்றே புரிந்தவர் நற்சீர்த்தி பெற்றிடின்
என்றும் இளமை இவர்க்கு.

— எஸ். சுந்தரமூர்த்தி, சிதம்பர

★

உல்வாத தென்றலிலே ஓர்கைம்பெண் ஈங்கு
நலமாக வாழவழி நல்கி--பழமையினை
கொன்று புதுமணமே காட்டுமவர்க் கென்வாழ்த்தே
என்றும் இளமை இவர்க்கு.

சி. நரசு, வேலூ

களங்கம்...

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

விம்மி விம்மியழுதாள்! ராமதேவன் எவ்வளவு ஆறுதல் கூறியும் பயன் இல்லே! ஒன்று தான் செத்துமடிய வேண்டும், இல்லாவிடில் ராஜபுத்திர வம்சத்திற்கு களங்கம் உண்டாக்கி விட்டு-சோரம் போன தன்தாயை கொன்று தீர்க்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள்.

தாய் என்ற பாசத்தை துறந்தாள்! மீண்டும் தான் எதற்காக சாகவேண்டும், கூடாது தனக்காகவே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் காதலன் சின்னுவிற்காகவாவது தான் வாழவேண்டும் என்று முடிவு கட்டினுள்,

சந்திரிகாவை எப்படியும் கொன்று தீர்க்கவேண்டும் என்று சபதம் கொண்டாள்!

★

அதற்குள் ஊரில் ஒரே ரகளே எங்கும் ஓலம்! அழுகுரல்! அரண்மனேயெங்கும் அமளி! மலிக்காபூரின் சேனேகள் ராமதேவனின் கோட்டைக் கதவுகளைத் தகர்த்துக் கொண்டிருந்தது போர் வீரர்கள் நாலாபக்கங்களிலும் சூழ்ந்து கொண்டனர்.

எதிர்பாராத இந்த எதிர்ப்பை சமாளிக்கமுடியாத ராமதேவன் தோற்றுப் போனுன்.

இனியும் இங்கிருந்தால் ஆபத்து என்றெண்ணிய சின்னுவும்-தேவலாவும் மாறுவேடம் அணிந்து இரண்டு குதிரைகளில் வெளியேறி விட்டனர்.

★

அரண்மனேயெங்கும் சலித்துப் புடைத்தும்கூட தேவலாவைக் காணுத மலிக்காபூர் உதட்டைப் பிதுக்கியபடியே வெளியேறினுன். சேனேகளுடன் திரும்பினுன்.

அலாவுதீனுக்கு என்ன சமாதானம் கூறுவதென்றே தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தான் மலிக்காபூர்.

வழிப்பயணத்தால் களேப்படைந்த சேனேகள் எல்லோராக் குகையருகில் இளேப்பாரத் தங்கிற்று.

பகல் அப்பொழுதுதான் கண்ணே மூடிக் கொண்டிருந்தது. இருள் மெல்லமெல்லசூழ்ந்துவந்தது, சிந்தனேயில் ஆழ்ந்தபடியே ஒரு பாறையில்சாய்ந்திருந்தமலிக்காபூர் தூரத்தில் குதிரைகளின் காலடி சப்தம் கேட்பதைஅறிந்து எழுந்தான்! திரும்பிப்பார்த்தான், சிறிது தூரத்திற்கப்பால் இரண்டு உருவங்கள் குதிரை மீது செல்வதைக் கண்டான். சேனு வீரர்களுடன் அந்ததிசை நோக்கி பின் தொடர்ந்தான். சில விணுடிகளில் அந்த இருவரையும் மலிகாபூரின் வீரர்கள் வளேத்துக் கொண்டனர்! அந்த இருவரில் முகமூடி நீக்கப்பட்டபின் ஒரு உருவம் பெண் எனத் தெரிந்து கொண்டான் மலிக்காபூர்.

"நீங்கள் யார்?" என்று உரத்த குரலில் கேட்டான் அந்த தளபதி.

"முதலில் நீங்கள் எந்தநாட்டு வீரர்கள் என்பதைக் கூறுங்கள்" என்று அதிகாரக் குரலில் கேட்டாள் அந்தப்பெண்!

"நாங்கள் அலாவுதீனின் ஆட்கள்" என்றுன் ஒரு வீரன்!

"நாங்களும் அங்குதான் செல்கிறோம்-வழித் துணேக்கு நீங்களும் வருவதானுல் மிக்கநலம்" என்று அந்தப் பெண் கூறியதும் மலிக்காபூர் திடுக்கிட்டுப்போனுன்!

'சரி' என்று கூறிவிட்டு நீங்கள் யார் என்பதை நான் அறியலாமோ என்று குழைவாகக் கேட்டான்.

"நான் தேவலாதேவி" என்று நறுக்கெனபதிலுரைத்தாள்அவள்.

எல்லாவற்றிற்கும் உடன் வந்த சின்னு வாய்திறவாமல் அமைதியாக இருந்தான்.

மலிக்காபூரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லே! 'சரி புறப்படுவோம்' என்று மலிக்காபூர் கூறியதும், வருகிறோம் ஆனுல் ஒரு நிபந்தனே என்றுள்.

'என்ன' வென்றுன் தளபதி! நான் அலாவுதீனே சந்திப்பதற்கு முன்-சந்திரிகா தேவியாரை நகரத்தின் எல்லேயில் சந்தித்து தனியாக பேசவேண்டும்என்றுதெரிவித்தாள்

மலிக்காபூரும்சம்மதம்கூறினுன்.

அவள் தெரிவித்தபடியே மலிக்காபூர் அந்த இருவரையும் சில சேனு வீரர்களின் பாதுகாப்பில் நகரின் எல்லேயில் நிறுத்திவிட்டு சந்திரிகாதேவியாரைபல்லக்கில் அழைத்துவந்து தனியாக அமைக்கப்பட்ட கூடாரத்தில் இறக்கிவிட்டான்.

மகளேக்காணப் போகிறேம் என்ற மகிழ்ச்சியால் பெருமூச்சு விட்டாள் சந்திரிகா.

கொண்ட சபதம் நிறைவேறப் போகிறது என்ற மகிழ்சிபெருக்கால் பெருமூச்சு விட்டாள் தேவலா!

சுற்றி நின்ற வீரர்களே விலகிப் போகும்படி சைகை காட்டினுள் தேவலா.

எல்லோரும் விலகிதூரச் சென்றனர். தேவலா குதிரையைவிட்டு இறங்கி கூடாரத்துள் நுழைந்தாள்.

'தேவரா-என் அருமை மகளே!' என்று ஆசையோடு அவளே அணேத்கொண்டாள் சந்திரிகா.

அவ்வளவுதான், இடையிலே மறைத்து வைத்திருந்த கட்டாரியை தாயின் வயிற்றிலே பாய்ச்சி விட்டாள் தேவலா!

'ஆ! ஐயோ'! என்ற பேரலறல்! "ராஜபுத்திர வம்சத்திற்கு ஏற்பட்ட களங்கம் இன்றேடு தொலேந்தது" என்று கூறிவிட்டு இடியெனச் சிரித்தாள் தேவலா.

விழி மூடித்திறப்பதற்குள் இந்த சம்பவம் நடந்து விட்டது! கூடாரத்தை விட்டு வெளியே வந்தாள் குதிரைமேல் தாவினுள். சின்னு வுடன் மின்னலென மறைந்தாள் தேவலா!

சுற்றி நின்ற வீரர்களுக்கு ஒன்றுமே புரியவில்லே! மலிக்காபூர் கூடாரத்திற்குள் வந்து பார்த்தான். குருதி வெள்ளத்தில் சந்திரிகா பிணமாகச் சாய்ந்து கிடப்பதைக் கண்டான். திடுக்கிட்டான்-அடுத்து என்ன செய்வதென்றே புரிய வில்லே அவனுக்கு. கூடாரத்தை விட்டு வெளியே வந்தான், அந்த இருவரும் சென்ற திசையைத் திரும்பிப் பார்த்தான். குதிரைகளின் காலடி எழுப்பிவிட்டுச் சென்ற புழுதி மண்டலம் தான் அவன் கண்களுக்குத் தெரிந்தது!

★

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed
... 23, Muthu Mudali St., Madras-14.